ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

06.01.2010 - மலர் 06, இதழ் 44




## பிரமிப்பூட்டும் 'மாயன் நாகரிகம்'

## சா/தரப் பரீட்சை எழுதியவர்கள் அடுத்து என்ன செய்யலாம்...?

## "டயறி" உருவான வரலாறு

## கொட்டாவி, விக்கல் ஏன் ஏற்படுகின்றன?

விலை ரூபா 15/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை




# ஆங்கிலக் கைதிகள்

கி.பி 1661 இல் இங்கிலாந்தின் இரண்டாம் ஜோர்ஜ் மன்னன் போர்த்துக்கல் நாட்டைச்சேர்ந்த புகன் சாபி கத்தரீன் எனும் அரசகுமாரியை திருமணம் செய்துகொண்டான். அதனால், போர்த்துக்கேயர் மும்பாய் நகரை அவனுக்குப் பரிசாகக் கையளித்தனர். ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றினால் கொழும்பு நகரைத் தருவதாகவும் வாக்களித்தனர். அந்தத் திருமண வாக்குறுதியின்படி ஒல்லாந்தரை இலங்கையிலிருந்து துரத்தினால் காலி நகரமும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாகும்.

எது எப்படி இருந்த பொழுதிலும் கறுவா வர்த்தகத்தை பொதுவாக வைத்துக்கொள்ள ஆங்கிலேயரும் போர்த்துக்கேயரும் இணங்கினர். ஒல்லாந்தர்கள் இந்த வாக்குறுதியை அறிந்துகொண்டனர். அத்துடன், 'ஆன்' எனும் கப்பல் மன்னரின் கட்டுப்பாட்டில் உள்ள கொட்டியாரத்தில் தரைதட்டி இருப்பதை அறிந்ததும் ஒல்லாந்தர் கலவரம் அடைந்தனர். தமது படை அணியொன்றை கொட்டியாரம் நோக்கி அனுப்புவதில் ஒல்லாந்த ஆள்பதி அவசரமாகச் செயல்பட்டார். எனினும், காலம் தாமதித்துவிட்டது. அதற்கு முன்பே அக்கப்பல் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டது. எனினும், அக்கப்பலில் இருந்த சில ஆங்கிலேயர்கள் மன்னரால் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின், ஒல்லாந்தர் கொட்டியாரத்தைக் கைப்பற்றவேண்டும் என சிந்தித்தனர். மன்னனின் சேனைக்கு எதிராகப் போரிட்டனர். கொட்டியாரத்தைக் கைப்பற்றினர். அங்கு கோட்டை ஒன்றையும் அமைத்து அதனைப் [illegible] அணியொன்றை நிறுத்திவைத்தனர். எனினும், ஒல்லாந்தப்படை அணியினருக்கு அங்கு நீண்டகாலமாக நிலைகொள்ள முடியவில்லை. கொடியகாய்ச்சல் அவர்கள் மத்தியில் ஏற்பட்டது. அதனால், பலர் இறந்தனர். எஞ்சியோர் கோட்டையை கைவிட்டு வெளியேறினர். இவ்விடயத்தில் தாக்கத்தை செலுத்திய மற்றுமொரு காரணியும் இருந்தது. அதாவது, கப்பலில் இருந்து மன்னரால் கைது செய்யப்பட்ட சிறைக்கைதிகளை தாங்கள் பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. எனினும், அவர்களால் அது முடியாமல் போனது. ஏனெனில், அதற்கு முன்பே அந்தக் கைதிகள் கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இக்காலகட்டத்தில், ஆங்கிலேயர்கள் சிலர் கைதிகளாக சென்னையிலும் இருந்தனர். அவர்கள் தமக்கு என்ன நேருமோ எனக் குழப்பம் அடைந்திருந்தனர். தமது உயிரைப் பாதுகாக்கும்படி பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகசங்கத்தின் முகவர்களுக்கு செய்தி அனுப்பினர். அந்த முகவர் தான் எட்வர்ட் வின்டர் என்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பாடசாலைகளிலும் கணினி நிலையங்கள்

நாட்டிலுள்ள அனைத்துப் பின்தங்கிய பாடசாலைகளிலும் 2010 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் கணினி நிலையங்கள் நிறுவப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டை ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆண்டாக பிரகடனப்படுத்தியதைப் போன்றே, அதன் மற்றுமொரு பரிணமிப்பாக



அடுத்த வருடம் பாடசாலைகளில் கணினி நிலையங்கள்

நிறுவப்படவுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதற்கமைய, ஏற்கனவே கடந்த வருட ஆரம்பத்தில் 500 கணினி நிலையங்களுடன் ஆரம்பிக்கப் பட்டுள்ள இந்தத் திட்டத்தின்படி, தற்போதளவில் 4000 கணினி நிலையங்கள் பல பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டு நிறைவடைகையில் மேலும் 1000 கணினி நிலையங்களை நிர்மாணிக்கும் திட்டம் பூர்த்தியடைந்துவிடும் என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# 7 பல்கலைக்கழகங்களில் 9 புதிய கற்கைப் பிரிவுகள்

இலங்கையிலுள்ள ஏழு பல்கலைக்கழகங்களில் ஒன்பது புதிய கற்கைப் பிரிவுகளை அமைப்பதற்கு உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஷ்வா வர்ணபால தீர்மானித்துள்ளார்.



அதன்படி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலை பீடத்திற்காக சட்டக் கல்விப் பிரிவொன்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்கு வணிக விஞ்ஞானம் மற்றும் புள்ளி விபரவியல் கற்கைப் பிரிவும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அரசியல் விஞ்ஞான கற்கைப் பிரிவும் அமைக்கப்படவுள்ளது. றுகுணு பல்கலைக்கழகத்திற்கு விற்பனைக் கற்கைப் பிரிவும் களனி பல்கலைக்கழகத்திற்கு வலுக்குறைவு தொடர்பான கற்கைப் பிரிவும் கொழும்பு பல்கலைக்கழகத்திற்குப் பொது மற்றும் சர்வதேச சட்டக் கற்கைப் பிரிவு, தனிநபர் மற்றும் ஒப்பீட்டியல் சட்டக் கற்கைப் பிரிவு, வணிக சட்டக் கற்கைப் பிரிவும் யாழ்.பல்கலைக்கழகத் திற்கு மீன்வள விஞ்ஞான கற்கைப் பிரிவொன்றும் நிறுவுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவைதவிர, உணவு மற்றும் மீன்வள உயிரியல் விஞ்ஞானம், உணவு தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம், நீரியல் வள தொழில்நுட்பம், காலம் மற்றும் பால் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் நடப்புகள் தொடர்பான வியாபார முகாமைத்துவம் ஆகியனவற்றை பட்டப்படிப்பு என்ற ரீதியில் தொழில்சார் கற்கை நெறிகளாக பல்கலைக்கழகங்களில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 79 பாடசாலைகள் இம்மாதம் 11 ஆம் திகதி ஆரம்பம்



க.பொ.த.சா/தரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள 79 பாடசாலைகளின் புதிய தவணை இம்மாதம் 11 ஆம் திகதியே ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. ஏனைய பாடசாலைகள் ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ளதன்படி இம்மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## விஜய் ஆசிரியர் பேசுகின்றேன்...



# கற்றலுடன் 'நல்ல மனிதன்' என்ற பட்டத்தையும் பெற்றிடுவோம்!

விடுமுறையைக் கழித்த மகிழ்ச்சி ஒருபுறம், புதிய ஆண்டின் தொடக்கம் மறுபுறம் என்று புதிய வகுப்பில் புதிய அனுபவங்களுடன் குதூகலித்துக் கொண்டிருப்பீர்கள். இந்த மகிழ்ச்சி என்றைக்கும் நிலைத்திருப்பதானது நீங்கள் உங்கள் இலக்குகளை அடைவதிலேயே தங்கியுள்ளது எனலாம்.

அதாவது, மாணவப் பருவம்தான் எதிர்கால வாழ்க்கைக்கான அத்திவாரத்தை இடும் அடித்தளமாகக் கருதப்படுவதுண்டு. அந்தவகையில், கல்வியே நமது வாழ்க்கையின் வெற்றி-தோல்விகளை நிர்ணயிக்கின்றது. மாணவர்களாகிய நீங்கள் இதனை நன்றாகப் புரிந்துகொண்டு கற்றலில் மிகுந்த ஈடுபாட்டைக் காட்ட வேண்டியது இன்றியமையாததாகும். கல்வி எனும்போது பாடத்திட்டத்தில் வருகின்ற கல்வியை மட்டுமன்றி; பொது அறிவு, உலக நிகழ்வுகள், நன்நடத்தைகள், பிறருக்கு சேவை புரிதல், மதப்பற்று, பிறமதத்தை மதித்தல் என பல விடயங்களையும்கூட நீங்கள் உள்வாங்கிக் கொள்ளல் வேண்டும். அப்போதுதான் ஒரு மனிதன் பூரணமான மனிதனாகின்றான். வெறும் புத்தகக் கல்வி மட்டும் ஒருவனை முழு மனிதனாக்கிவிடாது. இதர பொது விடயங்களையும் சேர்த்துத்தான் ஒருவன் முழு மனிதனாகின்றான்.

அந்தவகையில், 'நல்ல மனிதன்' என்ற பட்டம்தான் உலகிலேயே உயர்ந்த ஒரு பட்டமாகக் கருதப்படுகின்றது. 'நல்ல மனிதன்' என்பவன் உருவாகும் இடம்தான் பாடசாலையாகும். இத்தகைய சிறப்புமிக்க பாடசாலையில் நீங்கள் பெறுகின்ற அறிவை மட்டுமன்றி உங்களை வழிநடத்துகின்ற அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் ஆலோசனைகளையும் முழுமையாக உள்வாங்கிக் கொள்ளும்போதுதான் 'பலதையும் கற்றோன்' என்ற நிலையை அடையலாம்.

கற்றல் நடவடிக்கைகளின்போது எப்போதும் நீங்கள் அதில் ஈடுபாட்டைக் காட்டுவது மட்டுமன்றி, சக மாணவர்களுடனும் நட்புறவுடன் அனைத்தையும் பகிர்ந்து கொள்ளல்வேண்டும். அப்போது நமது அடைவு மட்டம் இரட்டிப்பு நிலையை அடையும். அந்தவகையில், இந்த வருடத்திலும் புதிய வகுப்பிற்குச் சென்றுள்ளீர்கள். இந்த வருடத்திற்கென கற்றல் அட்டவணையொன்றை வகுத்துக்கொள்ளுங்கள். கடந்த வருடம் பாடங்களில் விட்ட தவறுகள், கடினமாக இருந்த விடயங்கள் என்பனவற்றை பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். அவற்றை இந்த வருடம் திருத்திக்கொள்ள முயற்சியுங்கள். இனிவரும் நாட்களில் கற்கவுள்ள புதிய பாடங்களையிட்டும் ஒரு பார்வையை செலுத்திக்கொள்ளுங்கள். எவ்வாறு இனிவரும் பரீட்சைகளில் கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது பற்றியும் சிந்தியுங்கள். ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருடன் கலந்து ஆலோசியுங்கள். அப்போது இயல்பாகவே உங்களுள் கற்றலில் ஆர்வம் ஏற்படும்.

ஆர்வத்தை பற்றிப் பிடிப்பீர்களேயாயின், சாதனைகள் உங்களைத் தேடிவரும். பிறகென்ன சாதனையாளன் ஆவது மட்டுமன்றி, 'நல்ல மனிதன்' என்ற பட்டத்தையும் நீங்கள் சுவீகரித்துக்கொள்வீர்கள். அத்தகைய நல்லதொரு வாழ்விற்கான வழிகாட்டியாக பிறந்துள்ள இந்த புதுவருடம் அமையட்டும். அதற்கு 'விஜய்'யும் எப்போதும் உங்களுடன் கைகோர்க்கும். வாழ்த்துக்கள்.

நன்றி.

இப்படிக்கு,

வி.ரெட்வி ஹெரிசன்

(ஆசிரியர்-விஜய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வகைக் காய்ச்சலில் இருந்து தப்பித்துக்கொள்வோம்

**புதிய 'இன்ஃபுளுவென்சா ஏ' (H1N1) எனப்படும் தொற்றுக்காய்ச்சல் இன்று நாடு முழுவதும் வேகமாகப் பரவி வருகின்றது. குறிப்பாகப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மத்தியில் இந்நோய் பரவிவரும் நிலை காணப்படுகின்றது. இந்நோய் 'இன்ஃபுளுவென்சா ஏ' என்ற வைரசினால் பரவிவருகின்றது. சாதாரணமாக ஏற்படும் காய்ச்சல் மற்றும் தடிமனுக்கு காரணமாகும் 'இன்ஃபுளுவென்சா' வைரசும் இந்த வகை வைரசைப் போன்றதாகும்.**




## புதிய வகை இன்ஃபுளுவென்சா (H1N1) வைரஸ் என்றால் என்ன?

இந்தப் புதிய வைரஸ் அமெரிக்காவில் 2009 ஏப்ரல் மாதம் கண்டுபிடிக்கப்பட்டது. இது உலகம் முழுவதும் வேகமாகப் பரவிச்செல்ல ஆரம்பித்தது. 2009 ஜூன் மாதம் 11 ஆம் திகதி இது ஒரு தொற்று நோயாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மனிதரிலிருந்து மனிதருக்குப் பரவும் இந்நோய் ஆரம்பகாலகட்டங்களில் 'பன்றிக் காய்ச்சல்' என்று அழைக்கப்பட்டது. இந்த வைரஸ் பன்றிகளுக்கு ஏற்படும் இன்ஃபுளுவென்சா வைரஸ் என்று தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டதே அதற்கான காரணமாகும். இந்த வைரசின் மரபணுத்தொடர்புகளை ஆராய்ந்து பார்த்தால் அதில் மனிதருக்கிடையில் இருக்கும் இன்ஃபுளுவென்சா வைரசின் மரபணுக்களின் பகுதிகளும் பன்றிகள் மற்றும் பறவைகளுக்கு ஏற்படும் இன்ஃபுளுவென்சா வைரசின் மரபணுக்களும் கலந்திருக்கின்றன.

## சாதாரண காய்ச்சலைப் போன்றது

இது சாதாரண 'இன்ஃபுளுவென்சா' வைரஸ் காய்ச்சலை ஒத்ததாகும். எனினும், மனிதனின் சுவாசத்தொகுதியை இது பாதிப்பதனால் கூடிய கவனம்செலுத்துவது அவசியமாகும்.



## நோயின் அறிகுறிகள்

காய்ச்சல், தடிமன், இருமல், தொண்டை வலி, தொண்டை சிவந்துபோதல், வயிற்றோட்டம், வாந்தி ஆகிய அறிகுறிகள் சாதாரண தடிமன் காய்ச்சலுக்கு சமமானதாக இருப்பினும், சிறு பிள்ளைகளுக்கு வயிற்றோட்டமும் வாந்தியும் ஏற்படும். சிறுவர்கள், ஏற்கனவே நோய்வாய்ப்பட்டவர்கள், வயோதிபர்கள், நோய் எதிர்ப்புத் திறன் குறைந்தவர்களுக்கு இந்நோய் ஏற்படின் உடல் நிலைமை மோசமடையக்கூடும்.

## நோய்த்தொற்று

சளி மற்றும் உமிழ்நீரினால் இது மற்றவர்களுக்கு எளிதில் பரவும். நோயாளி தும்மும்போதும் இருமும்போதும் வெளியேறும் உமிழ்நீரினால் வைரஸ் மற்றவர்களுக்குப் பரவுகின்றது.

## உங்கள் குடும்ப அங்கத்தவர் இந்த நோயின் பாதிப்புக்குள்ளானால்....

குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு இவ்வாறான தொற்று ஏற்படின், ஏனையவர்களும் பாதுகாப்பாக இருப்பது அவசியமாகும். முதலில் குறிப்பிட்டது போன்று, இந்த நோயின் அறிகுறியும், சாதாரண தடிமன்காய்ச்சலின் அறிகுறியும் ஒன்றாக இருக்கின்றபடியால், இந்த நோயை உரிய மருத்துவப் பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தும் வரை நோயாளி உங்கள் மத்தியிலேயே வாழ்கின்றார் என்பதே உண்மை. எனவே, இந்நோய்க்கான அறிகுறி ஏற்பட்டால் கீழ் காணப்படும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

## முகக்கவசமும் கையுறையும்

இந்த நோய்க்கிருமிகள் இருமும்போதும் தும்மும்போதும் வெளியேறும் நீர் துகள்களினால் மற்றவர்களுக்குப் பரவுகின்றன. எனவே,தும்மும்போதும் இருமும்போதும் கைக்குட்டையினால் முகத்தினை மூடிக் கொள்ளுங்கள். நோயாளியைப் பராமரிக்கும்போது, முகக்கவசம் ஒன்றினையும் கையுறையையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நோயாளியினை கவனித்த பின்பு சவர்க்காரம் இட்டு கைகளைக் கழுவிக்கொள்ளுங்கள்.

## பயன்படுத்தப்படும் பொருட்கள்

நோயாளி பயன்படுத்தும் படுக்கைவிரிப்புகள், துவாய், தலையணை, பீங்கான் கோப்பைகள் என்பனவற்றில் கிருமிகள் இருக்கும். இதனால், நோயாளியின் உபயோகத்திற்கென அவற்றை வேறாக வையுங்கள். மற்றவர்கள் அவற்றைப் பயன்படுத்த இடமளிக்காதீர்கள்.

## இந்த நோய் தொற்றும் வாய்ப்புள்ளவர்கள்

- குறிப்பாக 6 மாதம் முதல் 19 வயதானவர்கள்.
- கர்ப்பிணித் தாய்மார்கள்.
- 50 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
- நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கள்.
- சுகாதார ஊழியர்கள், தாதிகள் மற்றும் நோயாளியுடன் நெருங்கிப்பழகுவோர்.

## நோய் பரவுவதைத் தடுக்க நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள்

- இருமல் அல்லது தும்மல் ஏற்படும்போது கைக்குட்டையினால் முகத்தினை மூடிக்கொள்ளுங்கள்.
- பயன்படுத்திய கைக்குட்டையை அடிக்கடி துவைக்கவும். டிஷூ கடதாசியாயின் பாதுகாப்பாக அப்புறப்படுத்துங்கள்.
- கைக்குட்டை, கடதாசி இல்லாதபோது உள்ளங்கையால் அல்லது மணிக்கட்டுப் பகுதியினால் முகத்தினை மூடிக் கொள்ளுங்கள்.
- அடிக்கடி கைகளை சவர்க்காரம் இட்டுக் கழுவுங்கள்.
- அவசியமின்றி முகத்தையும் மூக்கையும் தொடுவதைத் தவிருங்கள்.
- தடிமன் அறிகுறிகள் உள்ளவர்களிடமிருந்து சற்று விலகியிருங்கள்.
- கூட்டமான இடங்களுக்கு செல்வதனைத் தவிருங்கள்.



## நீங்கள் சுவாசம் சம்பந்தப்பட்ட நோயினால் பாதிப்புற்றவர்கள் எனின்

- மருத்துவ ஆலோசனைகளைப் பெறவும்.
- கைக்குட்டை, கடதாசி இல்லாதபோது உள்ளங்கையால் அன்றி, முழங்கைப் பகுதியினால் முகத்தினை மூடிக் கொள்ளுங்கள்.
- இருமல் அல்லது தும்மல் ஏற்படும்போது கைக்குட்டையினால் முகத்தினை மூடிக்கொள்ளுங்கள்.
- கூட்டம் கூடும் இடங்களைத் தவிர்த்துவிடுங்கள்.
- ஒரு வாரம் வரை ஓய்வெடுங்கள்.



ஏழு நாட்கள் வரை ஓய்வெடுங்கள்

## வீண் அச்சம் தேவையில்லை

இந்த புதிய வைரஸ் (H1N1) கடந்த ஜூன், 15 ஆம் திகதியே இலங்கையில் இனம் காணப்பட்டது. தற்பொழுது,மிக வேகமாக நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. முன்பு வெளிநாட்டில் வாழ்ந்தவர்கள் மற்றும் அவர்களுடன் பழகியவர்களுக்கே இந்த நோய் ஏற்பட்டது. எனினும், தற்பொழுது சாதாரண மக்கள் மத்தியிலும் இந்நோய் வேகமாகப் பரவுகின்றது. இந்த நோய் குறித்து வீண்அச்சம் தேவையற்றது. தற்பொழுது, இந்நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் மருந்துகள் சிகிச்சைகள் எதுவுமின்றி இந்நோய் சுகமடைகின்றது.

பொதுவாக நான்கு தினங்களில் இந்நோய் குணமடைந்து விடும். வீட்டில் இருந்து ஓய்வெடுப்பதன் ஊடாகவும் உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றுவதனூடாகவும் புதிய 'இன்ஃபுளுவென்சா' (H1N1) நோய்த் தொற்றை தவிர்க்க முடியும்.








தும்மலின்போது கைக்குட்டையை உபயோகப்படுத்துங்கள்.



தடிமன் உள்ளவர்களிடமிருந்து விலகியிருங்கள்.



தும்மும்போது கைக்குட்டை இல்லாவிட்டால், முழங்கையைப் பயன்படுத்துங்கள்



உள்ளங்கைப் பகுதியைப் பயன்படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறு

ஞாயிற்றுத்தொகுதியிலுள்ள கிரகங்களில் பூமியில் மட்டும்தான் உயிரினங்கள் வசிக்கின்றன. ஏனைய கிரகங்களிலும் உயிரினங்கள் உள்ளனவா? என்ற ஆராய்ச்சிகள் இன்றுவரை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இந்த ஆராய்ச்சிகளின் பலனாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா அண்மையில் ஒரு



செய்தியை அறிவித்துள்ளது. அந்தவகையில், செவ்வாயில் கடல் இருப்பது அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளதோடு, செவ்வாயில் பக்ற்றீரியாக்கள் இருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். அவர்களின் கருத்துக்களின்படி, கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களினாலேயே பூமி தற்போதுள்ள நிலையை அடைந்துள்ளது. முன்னைய காலகட்டத்தில் ஏராளமான விண்கற்கள் பூமியைத் தாக்கி, பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றன. அவற்றில் சுமார் 13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அண்டார்டிக்கா பகுதியில் விழுந்த ஓர் எரிகல் குறிப்பிடத்தக்கது.




அந்த எரிகல் 'எலன் ஹில்ஸ் 84001' என அழைக்கப்படுகின்றது. இது குறித்து நாஸா ஆய்வுக்குழுவினர் பல ஆண்டுகளாகப் பல்வேறு ஆய்வுகளை நடாத்தி வந்துள்ளனர். அவற்றின் பிரதிபலனாக அந்த எரிகல் செவ்வாயில் இருந்து விழுந்ததற்கான உறுதியான தடயங்கள்




கிடைத்திருப்பதாகவும் அவற்றில் பக்ற்றீரியா போன்ற நுண்ணுயிர்கள் இருந்ததற்கான புதைபடிவங்கள் கிடைத்திருப்பதாகவும் அந்த ஆய்வுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.




# சோயுஸ் விண்கலம் ISS உடன் இணைந்தது

சோயுஸ் ரொக்கெட் ரஷ்யாவின் சோயுஸ் டி.எம்.ஏ-17 விண்கலத்தை சுமந்தவாறு, கடந்த 22 ஆம் திகதி கஸகஸ்தானிலுள்ள 'பைகனூர்' ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றதோடு, 'சோயுஸ்' விண்கலமானது 23 ஆம் திகதி விண்வெளியில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது. இத்தகவலை வளரி லிண்டின் எனும் ரஷ்ய விண்ணாய்வு கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். 23 ஆம் திகதி ரஷ்ய நேரப்படி பகல் 11.48 மணிக்கு இந்த இணைவு நிகழ்ந்துள்ளது.

ரஷ்ய விண்வெளி வீரர் ஒலெக் கோடோவ், அமெரிக்க வீரர் டிபோதி கிரீமர், ஜப்பான் வீரர் சோய்ச்சி நோகுச்சி ஆகியோர் இந்த விண்கலத்தில் பயணம் செய்துள்ளனர். இந்த விண்கலம் பூமியின் சுற்றுப்பாதையை திட்டமிட்டபடி அடைந்ததாகவும் பின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்ததாகவும் ரஷ்ய கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.





விண்கலத்தில் சென்ற மேற்படி மூன்று விண்வெளி வீரர்களையும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் இருந்து தங்கியிருக்கும் விண்வெளி வீரர்களான ஜெப் வில்லியம்ஸ் (அமெரிக்கா), மெக்சிம் சுரவேவ் (ரஷ்யா) ஆகியோர் வரவேற்றனர். இவர்கள் ஐவரும் இணைந்து தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடமையாற்றவுள்ளனர். ஏற்கனவே சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இருக்கும் மேற்படி இரண்டு வீரர்களும் எதிர்வரும் மார்ச் மாதம் பூமிக்குத் திரும்புகிறார்கள். அத்துடன், தற்போது விண்வெளிக்குச் சென்று இருக்கும் மூன்று வீரர்களும் மே மாதம் வரை அங்கு தங்கி இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# சந்திரனில் காந்தசக்தி

*இந்தியா விண்வெளியில் ஏவிய சந்திரயான்-1 விண்கலம் அனுப்பி வைத்த தகவல்களை அடிப்படையாக வைத்து நிலவில் நீர் இருப்பது உறுதி செய்யப்பட்டமை நீங்கள் அறிந்ததே. இந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் விதத்தில் நிலவின் ஒரு பகுதியில் காந்தப்புலம் இருக்கின்றது என்றும் தற்போது தெரியவந்துள்ளது. சந்திரயான்-1 விண்கலத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்ட 'சாரா' என்ற கருவியினூடாகப் பெறப்பட்ட தகவல்களின் மூலமே இந்த விடயம் தெரியவந்துள்ளது. இதனை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ), ஐரோப்பா மற்றும் சுவீடன் விண்வெளி ஆராய்ச்சி மையங்கள் ஆகியவை இணைந்து உறுதிப்படுத்தியுள்ளன.*




*இந்த புதிய கண்டுபிடிப்பு மூலம், நிலவில் காந்தசக்தி இருக்கிறதா? என்ற நீண்ட நாள் ஊகம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து, சூரியனில் இருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்கள் பூமியை நேரடியாகத் தாக்காத வண்ணம் 'ஓசோன் படலம்' காப்பது போன்று, இந்தக் காந்தப்புலம் நிலவை காக்கின்றதா? என்பது குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், காந்தசக்தியின் எல்லை குறைவாக இருப்பதால் அது முழு அளவில் சாத்தியம் இல்லை என்று விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். மாறாக, சூரியனின் கதிர்வீச்சுத் தாக்கத்தை ஓரளவு தடுக்கும் அல்லது திசைதிருப்பும் வகையிலேயே இந்தக் காந்தப்புலம் உள்ளது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அத்துடன், நிலவில் காந்தசக்தி இருக்கும் பகுதியை பூமியில் இருந்து பார்க்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

# பூமியைப் போலவே இன்னொரு 'சூப்பர் பூமி'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பூமியைப் போன்று அதைவிட 2.7 மடங்கு பெரிய-நீர் நிறைந்த 'சூப்பர் பூமி' ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஹார்வேர்ட் பல்கலைக்கழக வானியல் பேராசிரியர்கள் நடத்திய ஆராய்ச்சியை அடுத்தே, பூமிக்கு அருகில் அதைவிட 2.7 மடங்கு பெரிதான மற்றொரு கிரகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கிரகத்தில் நீர், வெப்பம் என்பன இருப்பதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். புதிய கிரகத்துக்கு 'ஜிஜே 1214பி' என்று பெயரிட்டுள்ளனர். எனினும், பூமியை விட 2.7 மடங்கு பெரியதாக அது இருப்பதால், அதனை 'சூப்பர் பூமி' என்றும் அழைக்கின்றனர். இது குறித்து பேராசிரியர் சர்போனியூ கூறுகையில், "நமது கற்பனைக்கு எட்டாத அளவுக்கு புதிய கிரகங்களை இயற்கை உருவாக்கியுள்ளது. நமது பூமிக்கு அருகில் புதிய கிரகம் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.



செயற்கைக்கோளுடன் இணைந்த அதிநவீன தொலைநோக்கியை கொண்டே கிரகங்களை நாம் தேடுகின்றோம். எனினும், இந்தக் கிரகத்தை சாதாரண 16 அங்குல தொலைநோக்கியை வைத்தே கண்டறிந்தோம்" என்றார்.

இதுபோன்ற புதிய கிரகங்கள் இருப்பதை கடந்த சில ஆண்டுகளில்தான் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கத் தொடங்கினர். இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட சில கிரகங்கள் வியாழன் போன்ற அமைப்பில் இருந்தன. எனினும், 'சூப்பர் ஏர்த்' கிரகம்தான் பூமியைப் போல் உள்ளது என்றும் சர்போனியூ தெரிவித்துள்ளார். எனினும், புதிய கிரகத்தில் நீர் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறியிருந்தாலும், அங்கு உயிரினங்கள் வசிக்கின்றனவா? என்பது பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை

**நமது உடலில் ஏற்படும் சில செயற்பாடுகள் சிக்கலானவை. எனினும், இவை எமது உடல் செயற்பாட்டுக்கு அவசியமாக உள்ளன. இவ்வாறான சில செயற்பாடுகளைப் பார்ப்போம்**

# கொட்ட ஏன் ஏற்

## தும்மல் ஏற்படுவது ஏன்?


எமது மூக்கினுள் ஏதேனும் ஒரு பொருள் செல்லும்போது அங்குள்ள நரம்புகள் தூண்டப் பட்டு தும்மல் ஏற்படுகின்றது. அப்பொழுது சுவாசத் தொகுதிக்குள் உள்ள காற்று வெளியேறாதவாறு துரிதமாக மூடிக்கொள்கின்றது. அவ்வேளைகளில் சுவாசத்தொகுதியின் காற்றமுத்தம் அதிகரிக்கின்றது. அந்தக் காற்று வேகமாக மூக்கு மற்றும் வாயினால் வெளியேறு கின்றது. இச்செயற்பாட்டையே நாம் தும்மல் என்கின்றோம். தும்பு போன்றவை மற்றும் மிளகாய்த்தூள், பூக்களின் மகரந்தம், தூசு என்பன மூக்கினுள் சென்றால் அல்லது தடிமன் ஏற்படுத்தும் வைரஸ்கள் உட்சென்றால் தும்மல் ஏற்படும். சிலருக்கு இதனால் ஒவ்வாமை ஏற்படும். அப்பொழுது தொடர்ச்சியாகத் தும்மல் ஏற்படும். தும்மலில் நோய்க்கிருமிகள், பக்றீரி யாக்கள் இருக்கக்கூடும். இது சூழலில் கலப்பதனால் ஏனையவர்களுக்கும் நோய் தொற்றக்கூடும். அதனால், தும்மல் ஏற்படும்போது முகத்தினை மூடிக்கொள்வது அவசியம்.

## கொட்டாவி ஏன் ஏற்படுகின்றது?

வாய் திறக்கப்பட்டு ஆழமாகக் காற்று வெளியேறுவதே 'கொட்டாவி' எனப்படுகின்றது. ஆழமாக சுவாசிப்பதனால் குருதியில் உள்ள ஒட்சிசன் மற்றும் காபனீரொட்சைட்டை சமப்படுத்த கொட்டாவி வருகின்றது என முன்னர் மருத்துவர்கள் நம்பினர். எனினும், தற்போது மூளையின் வெப்பநிலையைக்கட்டுப்படுத்தவே கொட்டாவி வருவதாக மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். சோம்பல் மற்றும் நித்திரை ஏற்படும்போது கொட்டாவி ஏற்படுகின்றது. சிலருக்கு மற்றவர்கள் கொட்டாவி விடும்போது அவர்களுக்கும் ஏற்படுகின்றது.


## விக்கல் ஏற்படுவது ஏன்?

சுவாசத்தொகுதி மூடப்படுவதனால் காற்று அடைத்து 'இக்' என்ற ஒரு சத்தம் ஏற்படுகின்றது. இதனை 'விக்கல்' என்று குறிப்பிடுவர். விரைவாக உணவு உட்கொள்ளல், கலவரமடைதல், அவசரப்படுதல், குடலில் ஏற்படும் பாதிப்புகள் என்பன காரணமாகவும் விக்கல் ஏற்பட லாம். சுவாசக்குழாயில் ஏற்படும் நோய் நிலை காரணமாகவும் விக்கல் ஏற்படக்கூடும். நீர் அருந்துவதனால் விக்கல் தானாகவே நின்று விடும். சில வேளைகளில், திடீரென அதிர்ச்சியுறுவ தும் மெதுவாக மூச்சு விடுவதும் பலனளிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரவி, விக்கல் ...ற்படுகின்றன?



### பசி உணரப்படுவது எதனால்?

எமது குடலில் உணவு இல்லாததனால் பசி ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. எனினும், காய்ச்சல் அல்லது வேறு நோய்கள் ஏற்படும்போது குடலில் உணவு இல்லாவிடினும்கூட பசி உணர்வு ஏற்படாது. இதனால், முன்னர் குறிப்பிட்ட கருத்துத் தவறு என்று தெரிகின்றது. நாம் உணவு உட்கொள்வதற்கான தேவையை மூளையில் இருக்கும் 'ஹைபொத்தலமெஸ்' கட்டுப்படுத்துகின்றது. நாம் உட்கொள்ளும் உணவை விட அதிகளவு உழைப்பில் ஈடுபட்டாலும் பசி உணர்வு ஏற்படும். பசி உணர்வு அதிகரிக்கும்போது அது ஒரு வலியாக மாறிவிடும்.

குடலில் உற்பத்தியாகும் சுரப்புகள் இரண்டு வகைப்படும். அவை குரோலின் மற்றும் லெப்டின் என்பனவாகும். இவையிரண்டும் பசி உணர்வை அதிகரிக்க, குறைக்கப் பயன்படுகின்றன . பசி ஏற்படுவதில் எமது மனதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. குறிப்பிட்ட ஒரு நேரத்தில் உணவு உட்கொள்ளப் பழகினால் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் பசி ஏற்படும். எனினும், அந்தநேரத்தில் எமக்குப் பிடித்தமான வேலையில் ஈடுபடும்போது பசி உணர்வு தெரியாது. இது நமது மனதின் செயற்பாடாகும். உணவு உட்கொள்ளும்போது ஏற்படும் சுவையுணர்வுகளும் பசி உணர்வைத் தூண்டும். சுவையான உணவுப் பண்டங்களைப் பார்த்தவுடன் பசி ஏற்படுவதற்கும் அதுவே காரணம். உணவு உட்கொண்டு எமது குடல் நிரம்பியவுடன் குடலில் உள்ள குழாய்கள் விரிவடைந்து குடலில் ரசாயனங்கள் உற்பத்தியாகின்றன. இந்த ரசாயனத்தினால் ஹைபொத்தலமஸில் உள்ள விசேட பகுதியொன்று விரிவடைவதால் உணவு உட்கொள்வதற்கான தேவை இல்லாமல் போகின்றது. அதாவது, பசி அடங்கிவிடுகின்றது.

### மயக்கம் ஏன் ஏற்படுகின்றது?

மூளைக்குக் கிடைக்கும் ஒட்சிசன் குறைவடைவதாலேயே மயக்கம் ஏற்படுகின்றது. நரம்பு விரிவடைவதனால் குருதிநாளங்களில் ஏற்படும் அடைப்புக்களினால் மூளைக்கான ஒட்சிசன் விநியோகம் குறைவடைகின்றது. இதன் காரணமாக இதயத்துடிப்பும் குறைவடைகின்றது. இதனால், மூளைக்குக் கிடைக்கும் ஒட்சிசன் குறைவடைந்து மயக்க நிலை ஏற்படுகின்றது.

நரம்பு விரிவடைவதற்குப் பல காரணங்கள் உள்ளன. மோசமான மனஅழுத்தம், அதிக பீதி, உடல் உள வேதனை, உடலுக்குள் அழுத்தம் அதிகரிக்கக் கூடியவாறான விடயங்கள் இடம்பெறல் (குருதிக் குழாய்கள் வெடித்தல்) என்பனவே இந்நிலை ஏற்படுவதற்கான காரணிகளாகும். அதிக குருதிப்போக்கு, இதயத்துடிப்பு மாறல், குருதியில் சீனியின் அளவு குறைதல், உணவு உட்கொள்ளாதிருத்தல் என்பன மயக்கம் ஏற்படக் காரணமாக அமையக்கூடும்.

### வாந்தி ஏன் ஏற்படுகின்றது?

எமது மூளையில் இருக்கும் 'மஜ்ஜா' என்ற பகுதி விரிவடைவதால் வாந்தி ஏற்படுகின்றது. குடலில் ஏதேனும் வேண்டாத பொருட்கள் உட்சென்றவுடன் அதனை வெளியேற்ற வாந்தி ஏற்படுகின்றது. இதனால், வாந்தி ஏற்படுவது உடலைப் பாதுகாக்க என்று கருதப்படுகின்றது. சில மருந்துகள், ரசாயனங்கள், வேதனை, மனஅழுத்தம், வயிற்றுவலி, உணவு நஞ்சாதல் என்பன காரணமாகவும் வாந்தி ஏற்படக்கூடும்.

### கண்களை இமைப்பது ஏன்?

எமது கண்கள் மிகவும் மெல்லியதும் உணர்ச்சிமயமானதுமான படலத்தினால் மூடப்பட்டுள்ளன. இந்தப் படலம் கண்ணீரினால் பாதுகாக்கப்படுகின்றது. கண்களை மூடித் திறக்காவிடின் கண்கள் வறண்டுவிடும். கண்கள் வறண்டால் கண்ணில் எரிச்சல் உண்டாகும். இதனால், கண்கள் வறண்டு போவதனைத் தடுக்க கண்களை மூடித்திறக்கவேண்டும். கண்களுக்குள் ஏதேனும் சென்றுவிட்டால் அதனை வெளியேற்றுவதற்காக கண்கள் வேகமாகத் துடிக்கின்றன. அத்துடன், கண் இமைகள் கண்களைப் பாதுகாக்கின்றன. வெயில், அதிக வெளிச்சம் என்பனவற்றில் பாதுகாப்புப் பெறவும் கண்களுக்குள் ஏதேனும் செல்வதனையும் கண் இமைகள் தடுத்துவிடுகின்றன. பொதுவாக ஒரு நிமிடத்திற்கு 15 முதல் 20 தடவைகள் எமது கண் இமைகள் மூடித்திறக்கின்றன.

### அழுகையின்போது கண்ணீர் வருவது ஏன்?

கண்களில் இருக்கும் கண்ணீர் சுரப்பிகளினால் கண்ணீர் வருகின்றது. புரோட்டின், கொழுப்பு, ஓமோன் என்பன கண்ணீரில் காணப்படுகின்றன. எனினும், கண்ணீரின் கலப்பு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வேறுபடுகின்றன. உதாரணமாக, அழுகையின்போது உற்பத்தியாகும் கண்ணீருக்கும் ஏனைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் கண்ணீருக்கும் மாறுதல்கள் உள்ளன. அழுகையின்போது வெளியேறும் கண்ணீரில் புரோலெக்டீன் மற்றும் ஓமோனும் லியுசின் என்சபலின் எனும் வலி நிவாரணியும் அதிகமாக அடங்கியுள்ளன. இது கண்களில் ஏற்படும் எரிச்சலைத் தவிர்க்கின்றது. உதாரணமாக, வெங்காயம் வெட்டும்போது கண்ணீர் வருகின்றது. அதிக துன்பம், இன்பம் போன்ற உணர்வு நிலைகளின்போதும் கண்ணீர் வருகின்றது.

அழுகை என்பது மிகவும் சிக்கலான உடற் செயற்பாடாகும். அது எவ்வாறு செயற்படுகின்றது என்பது குறித்து திட்டவட்டமாகக் கண்டறியப்படவில்லை. எனினும், அழுகையின்போது ஓமோன்கள் பெரும் பங்காற்றுகின்றன. அழுகையின்போது மூளையிலிருந்து வெளியாகும் செய்தி, நரம்புகள் ஊடாக கண்ணீர் சுரப்பிக்குச் செல்வதன் மூலம் கண்ணீர் வருகின்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அத்துடன், கடும் மனவேதனையின்போதும் துன்பத்தின் போதும் அழுவதன் மூலம் மனதுக்கு அமைதி ஏற்படுகின்றது. அதனால், அழுகை உள ஆரோக்கியத்திற்கு சிறந்தது என்று கருதப்படுகின்றது.


### வியர்வை ஏற்படுவது ஏன்?

எமது உடலில் இரண்டரை மில்லியன் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. வியர்வைச் சுரப்பிகளினால் வியர்வை சுரக்கின்றது. [illegible] உடலில் இருந்து வியர்வை வெளியேறுகின்றது. உடல் வெப்பநிலை காரணமாக வியர்வை வெளியேறியதும் ஆவியாகி விடுகின்றது. அப்பொழுது உடல் குளிர்மையடைகின்றது. ஒரு சிலவேளைகளில், எமது உடலில் இருந்து அதிகளவு வியர்வை சுரக்கின்றது. விளையாட்டுக்களில் ஈடுபடல், உடற்பயிற்சி செய்தல் என்பனவற்றை இங்கு குறிப்பிடலாம். வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரிக்கும்போதும் உடலில் அதிக சூடு உணரப்படுகின்றது.

எனினும், உடலில் ஏதேனும் நோய் நிலைகள் ஏற்பட்டாலும் வியர்வை அதிகரிக்கும். உதாரணமாக 'தைரொயிட்' சுரப்பியின் செயற்பாடு அதிகரித்தல், குருதியில் சீனியின் மட்டம் குறைதல், காய்ச்சல் குறைவடையும் வேளைகளில் வியர்வையில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. வியர்வை ஏற்படும்போது காற்றினால் அடக்கப்படுகின்றது. வியர்க்கும்போது காற்று வீசும் இடத்திற்குச் சென்றால் உடல் குளிர்மையடைவது இதனாலேயே வியர்வையில் அதிகளவு நீரே அடங்கியுள்ளது. சோடியமும் அதிகளவில் உள்ளது வியர்வை உப்புச்சுவை கொண்டிருப்பதும் அதனாலேயே.

வியர்க்கும்போது அதிகளவு நீர் வெளியேறுவதால் அதிகளவு நீர் அருந்துவது அவசியமாகும். அல்லாவிடின், உடல் வறண்டுவிடும். உடலில் உள்ள பல்வேறு ரசாயனத்திரவங்கள் வியர்வையின் ஊடாக உடலிலிருந்து வெளியேறுவதால் வியர்ப்பது மிகவும் ஆரோக்கியமானது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். கைகளில், கால்களில், நெற்றியில் வியர்வைச் சுரப்பிகள் அதிகளவில் உள்ளதால், இப்பகுதிகளில் வியர்வை சுரக்கின்றது. கைகளின் அடிப்பாகத்தில் சுரக்கும் வியர்வையில் அதிகளவு கொழுப்புள்ளது. இதில் பக்றீரியாத் தொழிற்பாடு அதிகளவு ஏற்படின் துர்நாற்றம் வீசக்கூடும்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சா/தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் இனி என்ன செய்யலாம்...?







**க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை என்ற இலக்கினை நிறைவேற்றியவர்களாக, தற்போது நிம்மதிப் பெருமூச்சினை விட்டுக்கொண்டிருப்பர். இந்தப் பரீட்சையானது வாழ்வின் ஒரு மைல்கல் மட்டுமே. அதற்கும் அப்பால் உங்கள் எதிர்கால வாழ்வின் நிமித்தம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. இது அதற்கான அடித்தளத்தை இடுவதற்கு ஏற்ற காலமாகும். எனவே, அது பற்றி நாம் தெரிந்துகொள்வோம்**

## மீண்டும் பரீட்சைக்குத் தயாராதல்

பரீட்சையில் நீங்கள் எவ்வாறான திறமையை வெளிக்காட்டினீர்கள் என்பது குறித்து உங்களுக்கு இப்பொழுது தெரிந்திருக்கும். பரீட்சையில் போதியளவு திறமையைக் காட்டவில்லை என உங்களால் ஊகிக்க முடியுமாக இருப்பின், மீண்டும் பரீட்சைக்குத் தயாராவதே சிறந்தது. ஏனெனில், எதிர்காலத்தில் தொழில் வாய்ப்பு பெறவோ அல்லது வேறு ஏதும் மேற்படிப்புகளை மேற்கொள்ளவோ சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மிக அவசியமாகும்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் சரியாகத் திறமையை வெளிக்காட்ட முடியவில்லையாயின், அந்தப் பாடங்களை மட்டும் தெரிவு செய்து பரீட்சைக்குத் தோற்றுங்கள். இதற்கு நீங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வரும் வரை காத்திருக்கத் தேவையில்லை. பரீட்சை எழுதுவது என்பது ஒரு கலையாகும். எனவே, பிரத்தியேக வகுப்புகள் மற்றும் பரீட்சை வினாத்தாள் மீட்டல் போன்ற வகுப்புகளுக்குச் செல்லாமல்கூட உங்களால் பரீட்சை எழுதும் கலையை வளர்த்துக்கொள்ள முடியும். இது இரண்டாவது தடவையில் சிறந்த முறையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பேருதவி புரியும்.

## ஆங்கில மொழித்திறனை வளர்த்துக்கொள்ளல்

ஆங்கில மொழித்திறன் இன்று இன்றியமையாததாகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நீங்கள் அதன் தேவையினை உணரக்கூடும். பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர், நீங்கள் ஆங்கில அறிவினைக் கொண்டிராவிடின், தொழில் வாய்ப்புகளைப் பெறும் போது பல இழப்புக்களை சந்திக்க நேரிடும். எனவே, சாதாரண தரப் பரீட்சை முடிந்த காலப் பகுதி அதற்கு சிறந்ததொரு வாய்ப்பாகும். மொழி அறிவினை வளர்த்துக்கொள்ளாது கற்பதனாலும் வெறும் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களை அணுகியவுடனும் ஆங்கில மொழித்திறனில் முன்னேற்றம் ஏற்பட்டுவிடாது. சுய முயற்சியும் தியாகமும் அதற்கு அவசியம். வெட்கப் படாமல் தெரிந்தவகையில் ஆங்கிலம் பேசுதல், ஆங்கிலப் புத்தகங்களை வாசித்தல், ஆங்கில உரையாடல்களை செவிமடுத்தல், தினக்குறிப்பில் ஆங்கிலத்தில் பதிவுகளை மேற்கொள்ளுதல் என்பன ஆங்கில மொழித் திறனை வளர்க்கும் செயல்களாகும்.







## பாடநெறிகளைத் தொடர்தல்

பரீட்சை முடிந்துள்ள நிலையில் பெறுபேறுகள் வரும்வரை காலத்தை வீணடிப்பது அர்த்தமற்றதாகும். பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதற்கு ஆகக் குறைந்தது மூன்று மாதங்களாவது செல்லும். இந்தக் காலப்பகுதியில் நீங்கள் மூன்று மாதகால பாடநெறி ஒன்றினைக் கற்றுத் தேறலாம். தனியார் மற்றும் அரச கல்வி நிலையங்களில் அதற்கான வழிகள் செய்யப்பட்டுள்ளன.

பாடநெறியொன்றினைத் தெரிவு செய்யும் முன்னர் அதனைக் கற்பதனால் பிற்காலத்தில் உங்களுக்கு நன்மைகள் கிட்டுமா? என்பது குறித்து அறிந்து கொள்ளுங்கள். எல்லோரும் கற்கிறார்கள் என்பதற்காக நானும் கற்கவேண்டும் என்ற எண்ணத்தில் எந்தவொரு கற்கைநெறியையும் தொடர வேண்டாம். மாறாக, அது அறிவுத்திறன் விருத்திக்கு உதவுமா? அல்லது பிற்காலத்தில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுமா? என்பது குறித்து தீர்மானித்துக்கொள்வது அவசியமாகும். பாடநெறியின்போது செலவாகும் நேரம் பற்றியும் சிந்திக்கவேண்டும்.ஏனெனில், உயர் தரம் படிக்க நேர்ந்தால் பாடநெறியினை இடையில் கைவிடவும் நேரிடும். எனவே, அதுகுறித்து தெளிவு பெறுங்கள்.

## உயர் தரம் கற்கத் தயாராதல்

பரீட்சையில் சித்திபெற்று விட்டீர்களாயின் உயர் தரம் கற்பதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிட்டும். உயர் தரத்தினுள் பிரவேசிக்கும்போது பெரும்பாலானோர் எந்தத் துறையை தெரிவு செய்வது என்பது குறித்து குழப்பமடைகின்றனர். ஒரு துறையைத் தெரிவு செய்துவிட்டு அது கடினமானதென்பதை உணரும் பட்சத்தில் மற்றுமொரு துறையைத் தெரிவு செய்யப் பலர் முயற்சிக்கின்றனர். அவ்வாறே, சாதாரண தரப் பரீட்சையில் அதிஉயர் சித்தியைப் பெற்ற பலர் கடினமான துறைகளை தெரிவு செய்து விட்டு உயர் தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறி விடுகின்றனர்.

**'சாதாரண தரம் வரை கற்றுவந்த காலங்களில் உங்களுக்கு எந்தெந்தப் பாடங்களில் அதிக திறமையை வெளிக்காட்ட முடியுமாக இருந்தது என்பது தொடர்பில் விழிப்புணர்வு பெறுங்கள். அதன்படி, எந்தத் துறையை தெரிவு செய்தால் பொருத்தமாக இருக்கும் என நீங்கள் கருதுகின்றீர்களோ, அந்தத் துறையை தெரிவு செய்யுங்கள்'**



எனவே, சரியானதும் உங்களுக்குப் பொருத்தமானதும் உங்களால் திறமையை வெளிக்காட்டக்கூடியதுமான துறையைத் தெரிவு செய்வது அவசியமாகும். சாதாரண தரம் வரை கற்றுவந்த காலங்களில் உங்களுக்கு எந்தெந்தப் பாடங்களில் அதிக திறமையை வெளிக்காட்ட முடியுமாக இருந்தது என்பது தொடர்பில் விழிப்புணர்வு பெறுங்கள். அதன்படி, எந்தத் துறையை தெரிவு செய்தால் பொருத்தமாக இருக்கும் என நீங்கள் கருதுகின்றீர்களோ, அந்தத் துறையை தெரிவு செய்யுங்கள். சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறுவது திண்ணமாயின், உயர் தர பாடங்களுக்கான பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லவும் நீங்கள் தயங்கக்கூடாது. உயர் தர பாடங்கள் குறித்து மூத்த மாணவர்களின் அனுபவங்களைக் கேட்டறியுங்கள். இவை அனைத்தும் சிறந்த எதிர்காலத்தை அமைத்துத் தருவதற்கான உறுதியான அடித்தளமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வைத்திய கலாநிதி ஹட்சன சில்வா

# அணைந்த ஒளிக்கு உயிர் கொடுத்த வைத்தியர்

**பல தியாகங்களைப் புரிவதிலும் தான தர்மத்தில் ஈடுபடுவதிலும் பலர் பின் நிற்பதில்லை. இயல்பாகவே மனித நேயம் கொண்டவர்கள் பலர் எத்தனையோ இரக்கச்செயல்களில் ஈடுபட்டுள்ளதையும் ஈடுபட்டு வருவதையும் காண்கிறோம். அந்தவகையில், கண், தசை, சிறுநீரகம், குருதி போன்றவற்றைத் தானமாக வழங்குவது மிகச் சிறந்த உத்தம செயல்களாக கருதப்படுகின்றது. எனினும், சாதாரண ஒருவருக்கு இத்தகைய தானங்களை வழங்க விருப்பம் இருந்தபொழுதிலும் சமூகரீதியிலான நடைமுறையில் பற்பல சிக்கல்கள் ஏற்படும். எனினும், அந்நிலையை மாற்றி அத்தகைய உயர்ந்த தியாகங்களை வழங்க முன்வருபவர்களுக்காக சிறந்த நிறுவனமொன்றை 'இலங்கை கண்தான சங்கம்' என்ற பெயரில் இன்றைக்கு சில தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பித்தனர். அதனை ஆரம்பிப்பதற்கு முன்னின்று உழைத்தவர் கலாநிதி ஹட்சன் சில்வா அவர்களாவர்.**


கண்தான சங்கத்தின் தலைமையகம்

## இறந்த கண்ணுக்கு உயிர் கொடுத்தல்

1929 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி மொரட்டுவ இந்திபெத்த பிரதேசத்தில் ஹட்சன் சில்வா பிறந்தார். மொரட்டுவ இந்திபெத்த பௌத்த வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை பெற்றபின் மேலதிக கல்வியை வெள்ளவத்தை அரசினர் பயிற்சி வித்தியாலயத்திலும், கொழும்பு நாலந்த கல்லூரியிலும், பின்னர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் கற்றார். அதன்பின் மருத்துவத்துறை மாணவராக கொழும்பு விக்டோரியா நல்மரண கண்வைத்தியசாலையில் கல்வி கற்றபொழுது இறந்த ஒருவரின் கண்களை நரம்புத் தளர்ச்சியற்றதாயின் குணப்படுத்த முடியும் என்பதைக் கண்டுபிடித்தார். 1957 இல் ஆய்வின் மூலம் இதனைக் கண்டுபிடித்தார்.

1955 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 38 ஆம் இலக்க சட்டமொன்றின்படி 1961 ஜூன் மாதம் 11 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கண்தான சேவை மிகச்சிறிய அளவில் ஆரம்பிக்க வாய்ப்புக் கிடைத்தது. வைத்தியசாலைகளிலும் முதியோர் இல்லங்களிலும் இறப்பவர்களில் எவரும் பொறுப்பேற்காதவர்கள் இருப்பின் அத்தகையோரின்கண்களை மாத்திரமே பெறமுடிந்தது.


பின்னர் ஹட்சன் சில்வா அவர்கள் 'இறந்த கண்களுக்கு உயிர்' எனும் பெயரில் 'லங்காதீப' பத்திரிகைக்கு நீண்டதொரு கடிதம் எழுதினார். அதன் விளைவாக அதுவரை இத்தகைய தானச் செயலில் ஈடுபட விரும்பிய பலர் தமது மரணத்தின் பின் தமது கண்களைத் தானம் செய்ய முன்வந்தனர்.

1958 இல் ஹட்சன் சில்வா அவர்கள் அரச வைத்தியர்களுக்குத் துறை வைத்தியசாலைக்கு முதன்முதலாக நியமனம் பெற்றுச்சென்றார். அங்கு 60 வயதில் இறந்த நோயாளி ஒருவரின் கண்களைத் தானமாகப்பெற்றார். அதன்பின் மாகிரட் பெர்ணான்டோ எனும் பெண்ணிடம் இரண்டாவது சோடிக் கண்களைப்பெற்றார். அப்பெண்ணிடம் இருந்து பெறப்பட்ட ஒரு சோடிக் கண்கள் மூலம் இருவர் பார்வை பெற வழிவகுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961 ஜூன் மாதம் கொழும்பு கண் வைத்திய சாலைக்கு இடமாற்றம் பெற்று வருகைதந்த கலாநிதி ஹட்சன் சில்வா அவர்களுக்கு வந்த முதல் வருடத்தில் 11 சோடி கண்களும் இரண்டாம் வருடத்தில் 33 சோடிக் கண்களும் மூன்றாம் வருடத்தில் 100 இற்கு மேற்பட்ட சோடிக் கண்களும் பெறக்கூடியதாக இருந்தது. இவ்வாறு கண்தானம் செய்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தமையால் உள்நாட்டில் மாத்திரமல்ல வெளிநாடுகளில் உள்ள நோயாளிகளுக்கும் கண்பார்வை வழங்கும் பொருட்டு வெளிநாடுகளுக்கு கண்களை வழங்க ஹட்சன் சில்வா தீர்மானித்தார்.

அவர் நியூயோர்க், லண்டன், டில்லி, சிங்கப்பூர், டோக்கியோ நகரங்களில் இயங்கும் சிறந்த கண்சிகிச்சை நிபுணர்களுக்கு இதனைத் தெரிவித்து கடிதங்களை அனுப்பினார். அதன் விளைவாக, 1964 ஆம் ஆண்டு சிங்கப்பூரின் அரச வைத்தியத்துறையினருக்கு ஒரே முறையில் 6 கண்களை வழங்கக்கூடியதாக இருந்தது.அங்கு சிறந்த கண் வைத்திய நிபுணரான வைத்திய கலாநிதி ரொக்ட் லோ அவர்கள் இக்கண்களின் மூலம் 5 பேருக்கு கண் பார்வையை வழங்கினார். இச்செய்தி உலகம் முழுவதும் பத்திரிகைகள் மூலம் பிரசுரமாகியது. கண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடியதாக இருந்தமையால் கண்கள் விரையமாவது தவிர்க்கப்பட்டது. வஜிரராம விகாரையின் தலைமைக் குருவான நாரத தேரர் தமது 86 ஆவது வயதில் மரணமடைந்த பின்னர் அவரின் கண்களை ஜோர்தான் நாட்டுக்கு அனுப்பி அங்குள்ள 9 வயது நிரம்பிய ஹம்டான் எனும் பிள்ளைக்கு பார்வை வழங்கப்பட்டது.




இதற்கிடையில், ஜப்பான் நாட்டிற்கு கண்களை அனுப்பி அந்நாட்டின் சிலருக்கு கண் பார்வை பெற்றுக்கொடுத்தமையால் 'ஜப்பான் லயன்ஸ் கழகம்' அக்காலத்தில் கண்தான சங்கத்தின் போஷகராக விளங்கிய அக்கால ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவவிடம் ஒரு கோடி ரூபா பணத்தை வழங்கியது. மேலும், பல நன்கொடையாளர்களின் உதவியுடன் புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின.

இக்காலகட்டத்தில் கலாநிதி ஹட்சன் சில்வா தனது துணைவியாரின் கண்களை தனது இருகரங்களால் பெற்றது உலக வரலாற்றில் முக்கியமானதொரு மறக்கமுடியாத சம்பவமாகும். இன, மத, குல பேதங்களைக் கடந்து கண்களைத் தானமாக வழங்க அக்காலத்தில் இலங்கையில் புகழ்பெற்ற பலர் முன்வந்தனர்.

அவர்களில் வில்லியம் கோபல்லாவ மற்றும் அவரின் துணைவியார் திருமதி.கோபல்லாவ, முன்னாள் பிரதமர்களான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜோன் கொத்தலாவல, ரொபர்ட் சேனநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தன, ஆர்.பிரேமதாச ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களைத்தவிர, பல பிக்குமார்களும் கிறிஸ்தவ குருவானவர்களும் வேறு மதப்பெரியார்களும் கண்தானம் செய்துள்ளனர்.

கலாநிதி ஹட்சன் சில்வா அவர்களின் சிந்தனையில் உருவான 'கண்திசு வங்கி' 1996 இல் ஆரம்பிக்கப்பட்டது. அதில் பூதவுடல்களைப் பெற்று 12 வகையான கண் திசுக்களைப் பெற நடவடிக்கை


கண் வங்கி


ஆய்வுகூடம்

எடுக்கப்பட்டு ராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் திசுக்கள் தேவைப்படும் சாதாரண நோயாளிகளுக்கும் வழங்கி சுகமளிக்கப்படுகின்றது.

## பெருந்தொகையானோருக்கு பார்வை வழங்கல்

இதுவரை உலகின் 57 நாடுகளில் 114 நகரங்களை உள்ளடக்கி லட்சத்திற்கும் மேற்பட்ட கண்பார்வையற்றவர்களின் துயர்துடைக்க உதவி புரிந்தமை இலங்கையர்களான நாம் பெற்ற பெரும் பாக்கியமே. மக்களின் கண்தானம் செய்யும் விருப்பை நடைமுறையில் செயல்படுத்திய வைத்திய கலாநிதி ஹட்சன் சில்வா அவர்கள் கடந்த 1999 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி இப்பூவுலகை விட்டு மறைந்தார்.

கண் மற்றும் திசு தானம் செய்வது சம்பந்தமாக ஏதேனும் தகவல்களை அறிந்து கொள்ளவேண்டுமெனில்,

**பிரதம செயலாளர்,**<br>**இலங்கை கண்தான சங்கம்,**<br>**ஹட்சன் சில்வா கண்தான தலைமையகம்,**<br>**வித்யா மாவத்தை,**<br>**கொழும்பு-7.**<br>**தொலைபேசி இலக்கம்** -011-2698040<br>011-2698041-3<br>011-2696051

எனும் இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம்.

**-இரஞ்சித் ஜெயகர்**

# மொங்கோலியா




**அரசு:** நாடாளுமன்றக் குடியரசு.
**தாபிக்கப்பட்டமை:** 1206 இல் மொங்கோலிய சக்கராதிபத்தியம்; 1911 டிசம்பர் 29 க்விங் அரச வம்சத்திடமிருந்து சுதந்திரம்.
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திரதினம்/புரட்சித்தினம் ஜூலை-11.
**ஜனாதிபதி** (2009): சாகியாஜின் எல்பெக்டோர்ஜ்.
**பிரதமர்** (2009): சுக்பாட்டரின் பெட்போல்ட்.

## புவியியல்

மொங்கோலியா,மத்திய ஆசியாவில் அமைந்துள்ள நாற்புறமும் நிலப்பரப்பால் சூழப்பட்ட ஒரு நாடாகும். வடக்கு-ரஷ்யாவின் சைபீரிய பெருநிலப்பரப்பு; கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு-சீனா என்பன எல்லைகளாக அமைந்துள்ளன. வடக்கே 3000 முதல் 5000 அடி வரையிலான உயரத்திற்கு மொங்கோலிய பீடபூமி காணப்படுகின்றது. இது பல நதிகளின் உற்பத்திப் பிரதேசமாகத் திகழ்கின்றது. ஹோவ்ட், ஓனன், செலென்கா, டுலா என்பன நாட்டின் பிரசித்திபெற்ற நதிகளாகும்.

'கோபி' பாலைவனம் அமைந்துள்ள தென் பிரதேசத்திற்கருகில் மரங்களற்ற புல்வெளிகளைக்கொண்ட சமவெளிகளைக் காணலாம். மேற்கில் நாட்டின் மிக உயரமான 'அட்லாய்' மலைத்தொடர் காணப்படுகின்றது. ரஷ்யாவின் எல்லைக்கருகில் அமைந்துள்ள 'ஹோவ்ஸ்கோல்' ஆசியாவின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும். இதுதவிர, ஆயிரக்கணக்கான சிறு ஏரிகளும் மொங்கோலியாவில் காணப்படுகின்றன. நாட்டின் மேற்கு மற்றும் வடபகுதியில் பூமியதிர்ச்சி மற்றும் எரிமலை வெடிப்புக்கள் ஏற்படுவதுண்டு.

**மொத்த நிலப்பரப்பு:** 604,247 ச.மைல் (1,565,000 ச.கி.மீ).
**தலைநகரம்:** உலான்பாடார்.
**உயர் சிகரம்:** நைராமெட்லின் ஓர்ஜில் (14350 அடி)- இது அட்லாய் மலையில் உள்ளது.
**தாழ்ந்த மையம்:** ஹோவ்ஸ்கோல்.
**நிலப்பிரிவுகள்:** 21 மாகாணங்கள் மற்றும் 1 மாநகரம்.
**சனத்தொகை:** 3,041,142.
**நாணயம்:** டுக்ரிக்.
**மொழிகள்:** மொங்கோலியன் 90%; தவிர, டுர்கிக் மற்றும் ரஷ்ய மொழியும் பாவனையில் உள்ளன.
**இனங்கள்:** மொங்கோல் 94.9%, டுர்கிக் 5%, ஏனையோர் (சீன மற்றும் ரஷ்யர் உட்பட) 0.1%.
**சமயங்கள்:** பௌத்த லாமாஸம் 50%,இஸ்லாம் 4%, ஷாமானிஸம் மற்றும் கிறிஸ்தவம் 4%, மதக்கொள்கை அல்லாதோர் 40%.
**எழுத்தறிவு** (2003): 99%.
**இணையத்தளக் குறியீடு:** .mm
**சர்வதேச தொலைபேசிக் குறியீடு இலக்கம்:** 976.
**தேசிய சின்னங்கள்:** மரம், மலர், பறவை, மிருகம், விளையாட்டு என எதுவுமே பிரகடனப்படுத்தப்படவில்லை.

## தேசிய கீதம்

Darkhan manai tusgaar uls
Dayar Mongolyn ariun golomt
Dalai ikh deedsiin gegeen uils
Dandaa enkhjij, uurd monkhojno.....என ஆரம்பமாகின்றது.



ஜனாதிபதி
பிரதமர்

## வரலாறு

ஏறக்குறைய 2000 வருடங்களுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்த வரலாற்றுப் பெருமையைக்கொண்டது. சென்ஜிஸ்கான் காலத்தில் பேரரசாக உருவெடுத்து, கருங்கடல் மற்றும் தெற்கில் இமயமலை வரை பரந்திருந்தது. 'மஞ்சு' என அழைக்கப்பட்ட இப்பிரதேசம் 1689 முதல் 1911 வரை சீன 'க்விங்' அரச வம்சத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1912 முதல் 1919 வரை ரஷ்யாவின் பாதுகாப்பில் சுதந்திர நாடாகவும் 1919 முதல் 1921 வரை மீண்டும் சீனாவில் கீழும் இருந்தது. 1921 இல் சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டதோடு, 1946 இல்தான் சீனா அதனை அங்கீகரித்தது. இதன் முதலாவது பொதுத்தேர்தல் 1990 இல் நடைபெற்றது.

## கலாசாரம்

தற்கால மொங்கோலிய கலாசாரமானது மொங்கோல் பூர்வீக நாடோடிகளின் வாழ்க்கையுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாகவும் அதன் தாக்கத்தை பெருமளவு உள்வாங்கியதாகவும் விளங்குகின்றது. அத்துடன், திபெத் நாட்டினதும் திபெத்திய பௌத்த மதத்தினதும் தாக்கம் நிறைந்து காணப்படுகின்றது. 20 ஆம் நூற்றாண்டு முதல் ரஷ்ய கலாசாரமும் ரஷ்யா வழியாக ஐரோப்பிய கலாசாரமும் மொங்கோலிய கலாசாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின.

## காலநிலை

சற்று வெப்பமான கோடையைக்கொண்ட இந்நாட்டின், கடல்மட்டத்தில் உள்ள பிரதேசங்களில் மாரிகாலத்தில் கடுங்குளிர் காற்று வீசுகின்றது. இங்கு மிக உயர்ந்த வெப்பநிலையாக 60°F முதல் 70°F வரையான வெப்பம் நிலவும். மாரிகாலத்தில் வெப்பமானது 25°F ஆகக் குறைவடையும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 158,900. **செல்லிடத் தொலைபேசி** (2006): 775,300. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2006): AM 7 , FM 115, SW 4. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்**: 456. **இணையத்தள வழங்குனர்கள்:** 298. **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 268,300.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்:** மொத்தம் 49,250 கி.மீ. **பெருந்தெருக்கள்:** 47,526 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** இல்லை. **விமான நிலையங்கள்:** 44.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கைக்கேற்ற நிலம் 1%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** காய்கறி வகைகள், தானிய வகைகள், செம்மறியாடுகள், மாடுகள், ஒட்டகங்கள், குதிரைகள். **தொழிலாளர் தொகை:** 1.042 மில்லியன் (விவசாயம் 39.9%, கைத்தொழில் 11.7, சேவை 49.4%). **வேலையற்றோர்:** 3%. **கைத்தொழில்கள்:** கட்டடங்களும் கட்டடப் பொருட்களும், சுரங்கத்தொழில், எண்ணெய், உணவு வகைகள், பண்ணை உற்பத்திகள், பட்டுநூல் உற்பத்தி. **இயற்கை வளங்கள்:** எண்ணெய், நிலக்கரி, செம்பு, டங்ஸ்டன், பொஸ்பேற், தகரம், நிக்கல், துத்தநாகம், கந்தகம், தங்கம், வெள்ளி, இரும்பு என்பன. **ஏற்றுமதிகள்** (2007): செம்பு, புடவை, கால்நடை, மிருக உற்பத்திகள், காஷ்மீர் நூல். **இறக்குமதிகள்** (2007): இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும், எண்ணெய், எரிபொருள், மோட்டார் கார்கள், உணவு உற்பத்திப் பொருட்கள்.
**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** சீனா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, ரஷ்யா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

* ஹோவ்ஸ்கோல் ஏரி * சுக்பாடார் சதுக்கம் * மன்ஷிர் கிட் * சாய்சன் நினைவுத்தூபி * டெரெஜ் தேசிய பூங்கா * கொய்ஜின் லாமா வணக்கஸ்தல நூதனசாலை * நஸ்ஸான் விருந்தினர் விடுதி * அரசியல் துன்புறுத்தலுக்குட்பட்டவர்களின் நினைவகசாலை. * ஏழு உச்சிகள் (Seven Summits) - வெளிப்பயணங்களுக்கான பொருட்களை சில்லறையாக வாங்குவதற்குப் பிரசித்தி பெற்ற இடம்.




டெரெஜ் தேசிய பூங்கா


ஹோவ்ஸ்கோல் ஏரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் கணிப்பீடு சார்ந்த வினாக்கள் உள்ளடங்கிய மாதிரிப் பரீட்சை

## வினாத்தாள் II (கடந்த வார தொடர்ச்சி...)

பெயர்: ................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

03. (i) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.
   - ✱ கானகத்தில் மிருகங்கள் நீரின்றி அலைந்தன.

   ....................................................................................

   (ii) பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.
   - ✱ மரம் காற்றில் அசைந்து ஆடியது.

   ....................................................................................

04. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களை வைத்து, வாக்கியங்களை மறுபடியும் எழுதுக.
   (i) கஜன் **உண்மை** பேசியதால் எல்லோரும் அவனைப் **போற்றினார்கள்.**

   ....................................................................................

   (ii) நந்தன் ***குற்றவாளி*** என நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

   ....................................................................................

05. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
   (i) தோள் கொடுத்தல் - ........................................
   (ii) நாக்குப் புரளுதல் - ........................................
   (iii) ஒற்றைக் காலில் நிற்றல் - ........................................

06. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.
   (i) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன் - ........................................
   (ii) அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர் - ........................................

07. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
   (ii) கந்தையானாலும் கசக்கிக் கட்டு - ........................................
   (iii) பேராசை பெருந் தரித்திரம் - ........................................

08. சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.
   மகா வித்தியாலயம்/கல்வியிற்/பாரதி/விளங்கியது/சிறந்து

   ....................................................................................

09. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
   (ii) வகுப்பறை ........................ (ii) அதிபர் ........................
   (iii) ஆசிரியர்........................

10. கருத்தை தமிழில் எழுதுக.
   (i) I am sorry - ........................................
   (ii) Please sit down - ........................................
   (iii) How are you? - ........................................

11. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.
   (i) ஒயா(G)கே பாசலே நம மொக்கத? ........................................
   (ii) ம(ட்)ட வ(த்)துர டிகக் (Dh)தென்ன. ........................................

★ *12 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடைகளின் கீழ்க் கோடிடுக.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இலைக்கஞ்சி தயாரிக்கப் பயன்படும் தாவர இலை எது?
   (1) கோப்பை இலை (2) கொடிக்கள்ளி இலை
   (3) சீக் குறிஞ்சி இலை (4) அலரி இலை

13. இரு வித்திலைத் தாவரம் எது?
   (1) பப்பாசி (2) தென்னை (3) பனை (4) கமுகு

14. தொட்டாற்சிணுங்கிப் பூவின் வடிவமுடைய பூ எது?
   (1) அகத்தி (2) சூரியகாந்தி (3) முருங்கை (4) இப்பிலிப்பில்

15. தென்னம் வண்டு தென்னையைத் தாக்காது பாதுகாக்க, தென்னைக்கு அருகில் வளர்க்கப்படும் தாவரம் எது?
   (1) குருவிச்சை (2) கரும்பு (3) கொடிக்கள்ளி (4) பிரம்பு

16. கொத்தாகப் பூக்கும் பூ எது?
   (1) அலரி (2) செவ்வரத்தை (3) சூரியகாந்தி (4) ரோசா

17. எல்லாக் காலத்திலும் பூக்கும் தாவரம் எது?
   (1) வேம்பு (2) தென்னை (3) இலுப்பை (4) முள்முருக்கு

18. 
   இவ்வுருவில் உள்ள தாவரம் எது?
   (1) குப்பைமேனி (2) ஆமணக்கு
   (3) கற்பூரவள்ளி (4) கண்டங்கத்தரி





19. கழிச்சல் நோயைப் பரப்பும் பிராணி எது?
   (1) நாய் (2) எலி (3) ஈ (4) நுளம்பு

20. எட்டுக்கால்களை உடைய பிராணி எது?
   (1) நுளம்பு (2) சிலந்தி (3) இறால் (4) வீட்டு ஈ

21. குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை எது?
   (1) தேவாங்கு (2) ஆந்தை (3) நாகணவாய் (4) வெளவால்

22. மகிழ்ச்சியான முகம் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3) (4)

23. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?
   (1) ISO (2) SLS (3) SOS (4) ISBN

24. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவின் கூறு எது?
   (1) இலிப்பிட்டு (2) விற்றமின் (3) காபோவைதரேற்று (4) புரதம்

25. கடவுச் சீட்டு வழங்கும் திணைக்களம் எது?
   (1) ஆட்பதிவுத் திணைக்களம் (2) குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்
   (3) சுங்கத் திணைக்களம் (4) பொலிஸ் திணைக்களம்

26. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் மூன்று பகுதிகள்;
   (1) தர்ம சக்கரம், நெற்கதிர், அரச இலைகள்
   (2) அரச இலைகள், பூவிதழ்கள், நெற்கதிர்
   (3) தர்ம சக்கரம், நெற்கதிர், வாளேந்திய சிங்கம்
   (4) நெற்கதிர், சங்கு, தர்ம சக்கரம்

27. இலங்கையின் தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
   (1) ஆனந்த சமரக்கோன் (2) புலவர்மணி மு.நல்லதம்பி
   (3) C.W.W. கன்னங்கர (4) டி.பி.ஜாயா

28. தென் மாகாணத்தின் தலைநகரம் எது?
   (1) கண்டி (2) கொழும்பு (3) பதுளை (4) காலி

29. இலங்கையின் தேசிய மலர் எது?
   (1) நீலோற்பலம் (2) சூரியகாந்தி
   (3) மல்லிகை (4) நாகமலர்

30. களனி கங்கை கடலுடன் கலக்கும் இடம்;
   (1) கொழும்பு (2) திருகோணமலை
   (3) மாத்தறை (4) களுத்துறை

31. மின்னேரியாக் குளத்தைக் கட்டிய மன்னன் யார்?
   (1) பண்டுகாபயன் (2) மகாசேனன்
   (3) தாதுசேனன் (4) தேவநம்பியதீசன்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

### வினாத்தாள் I இன் விடைகள்

*(டிசம்பர் 23, 30 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | |
|---|---|---|---|---|
| *(01) 1* | *(09) 3* | *(17) 2* | *(33) 3* | *(25) 2* |
| *(02) 2* | *(10) 3* | *(18) 2* | *(34) 2* | *(26) 2* |
| *(03) 3* | *(11) 3* | *(19) 3* | *(35) 2* | *(27) 2* |
| *(04) 2* | *(12) 1* | *(20) 1* | *(36) 1* | *(28) 2* |
| *(05) 2* | *(13) 1* | *(21) 2* | *(37) 3* | *(29) 3* |
| *(06) 3* | *(14) 3* | *(22) 3* | *(38) 2* | *(30) 3* |
| *(07) 1* | *(15) 1* | *(23) 1* | *(39) 2* | *(31) 2* |
| *(08) 3* | *(16) 3* | *(24) 3* | *(40) 1* | *(32) 2* |

**உலக வரலாற்றினை ஆராயும்பொழுது ஆதிகாலம் முதல் உலகின் நாலாதிசைகளிலும் மனிதன் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. மக்கள் எங்கும் பரவி வாழ்ந்த பொழுதிலும், குறிப்பிட்ட சில பகுதிகளில் வாழ்ந்த மக்களே ஏனைய மக்களைவிட முன்னேற்றகரமாகவும் வழிகாட்டிகளாகவும் பல்வேறு துறைகளில் சிறந்தோங்கி வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. அவர்களின் பல்வேறு துறைசார் சிறப்புத்தன்மைகளையே 'நாகரிகங்கள்' என்று கூறுகின்றோம்**


மாயன் நாகரிகம் பரவியிருந்த பகுதி

# பிரமிப்பூட்டும்

இத்துறையில் பெரும் ஆய்வுகளை மேற்கொண்ட இங்கிலாந்து வரலாற்றாசிரியரான கோடன் சைல்ட் (Goedon Childe) என்பவர் அதுகுறித்து பத்து அளவுகோல்களை வகுத்தார். நாகரிகங்கள் தொடர்பாக அவர் வகுத்த பத்து அளவ்கோல்களும் பின்வருமாறு;

✱ நகரக் குடியிருப்புகள் ✱ தொழிலாளர்களின் சிறப்புத் திறமைகள் ✱ தேவைக்கு அதிகமான உற்பத்தி ✱ சமுதாயப் பிரிவுகள் ✱ அரசாங்க அமைப்பு ✱பொதுமக்களுக்கான பெரிய கட்டடங்கள் ✱ தொலைதூர வாணிபம் ✱ கலைப்பொருட்கள் ✱ எழுத்துக்கள், இலக்கியங்கள் ✱கணிதம், புவியியல் அறிவு, வானியல் துறைகளில் தேர்ச்சி.

## சிறந்த நாகரிகங்கள்

மேற்குறித்த அம்சங்கள் அனைத்தும் பொருந்திய நாகரிகங்களில் பின்வரும் நாகரிகங்கள் மிக முக்கியமானவையாகும்.

✱ மாயன் நாகரிகம் ✱ மொசப்பத்தேமியா நாகரிகம் ✱ எகிப்திய நாகரிகம் ✱ சீன நாகரிகம் ✱ சிந்துவெளி நாகரிகம் ✱ கிரேக்க நாகரிகம் ✱ ரோமானிய நாகரிகம்.

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட ஏழு உலக அதிசயங்களில் ஒன்று மாயன் நாகரிகத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால், இன்றைய உலகம் மீண்டும் மாயன் நாகரிகத்தைப் (மாயா நாகரிகம்) பற்றி பெரியளவில் பேசத்தொடங்கி உள்ளது.



## மாயன் நாகரிகம் (கி.மு 2600-கி.பி 900)

மாயன் நாகரிகம் அமெரிக்காவில் வாழ்ந்த செவ்விந்தியர்களிடம் காணப்பட்ட நாகரிகமாகும். கி.மு 2600 ஆம் ஆண்டளவில் மத்திய அமெரிக்காவில் தோன்றியதாகக் கருதப்படும் இந்நாகரிகம், கட்டடக்கலையிலும் வானவியலிலும் நாட்காட்டி தயாரிப்பதிலும் அலங்கரிப்புடன்கூடிய வீடுகளை நிர்மாணிப்பதிலும் அக்காலத்தில் எவருமே கற்பனை செய்யமுடியாத திறமைகளை வெளிக்காட்டியதாக வரலாறு கூறுகின்றது.

இவைதவிர, தேவாலயங்கள், பிரமிட்டுகள், மாளிகைகள், காட்சிசாலைகள் என்பனவற்றை சிறந்த முறையில் அமைக்கும் ஆற்றல்களும் மாயன் நாகரிகத்துக்கு உட்பட்ட மக்களிடம் காணப்பட்டன. மேலும், உலோகத்தால் செய்யப்பட்ட கருவிகளின் உதவிகள் இல்லாமலேயே அவர்கள் இவை அனைத்தையும் உருவாக்கினார்கள் என்பதும் மற்றொரு ஆச்சரியம் தரும் விடயமாகும். அத்துடன், முறையான விவசாயம், நெசவு நெய்தல், மட்பாண்டங்கள் தயாரித்தல் போன்ற துறைகளிலும் அவர்கள் மிகவும் சிறந்த அறிவைப் பெற்றிருந்தனர். தாம் உற்பத்தி செய்த பொருட்களை உலக மக்களுக்கு கொண்டு செல்ல திட்டமிட்ட போக்குவரத்துப் பாதைக்கட்டமைப்புகளை அடர்ந்த காடுகளின் ஊடாக அமைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, இத்தகைய சிறப்புமிக்க மாயன் நாகரிகத்தைப் பற்றி நாம் சற்று விரிவாகப் பார்ப்போம்.

## வாழ்ந்த பிரதேசம்

இவர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் காலத்தின் போக்கு மற்றும் அரசியல் மாற்றங்களால் இன்று மத்திய அமெரிக்காவில் ஐந்து நாடுகளாக இருக்கின்றன.அவை;மெக்ஸிகோ,கவுதமாலா,பெலீஸ், ஹொண்டுரஸ், எல்சல்வடோர் என்பனவாகும்.



## நாகரிகத்தின் மைல்கற்கள்

✱ **கி.மு 11000:** மாயன் பகுதியில் மக்கள் முதன்முதலாகக் குடியேறத் தொடங்கினர் எனக் கருதப்படுகின்றது. இவர்கள் அயல்நாடுகளில் இருந்து வந்து இங்கு குடியேறி இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவர்கள் பழங்கள், காய்கறிகள், பறவைகள், மிருகங்களைப் பச்சையாக உண்டு வாழ்ந்தார்கள்.

✱ **கி.மு 2600:** மாயன் நாகரிகத்தின் ஆரம்பம். மக்கள் வேட்டையை மட்டும் நம்பியிருக்காமல் விவசாயத்திலும் ஈடுபட ஆரம்பித்தனர்.

✱ **கி.மு 700:** Hieroglyph எனும் சித்திர எழுத்து முறையினை மாயன்கள் ஆரம்பித்தனர். இச்சித்திர எழுத்து முறையானது வாசிக்கும் முறையில் இல்லாமல் படம் வரைந்து விளக்கும் முறையாக இருந்தது.

✱ **கி.மு 400:** இக்காலகட்டத்தில் இவர்களால் கெலண்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

✱ **கி.மு 300:** மன்னர்கள், பிரபுக்கள், பூசாரிகள் என ஒவ்வொரு பதவிக்குமான பொறுப்புகள், அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன.

✱ **கி.மு 100:** Teotihuacan என்ற நகரம் மாயன் மக்களால் உருவாக்கப்பட்டது. இந்த நகரம் இன்றும் இருக்கிறது. கலை, மதம், வர்த்தகம் என்பன இங்கு தழைத்தோங்கின.


கைதிக
மதகுருமா
தண்டனை
படுத்தப
காட்சி
சித்தரிக்கு


மாயன் நாகரிக மட்பாண்டம்


மாயன் கால குடியிருப்புக்கள்



மாயன் நாகரிக வழிபாட்டுத் தலமொன்று


தற்காலத்தில் வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




...யிருந்த பகுதி



மாயன் மக்கள்



மாயன் மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபடல்




மாயன் எழுத்துக் குறியீடுகள்



# 'மாயன் நாகரிகம்'

* **கி.மு 50:** Cerros என்ற நகரம் உருவாகியது. இது கோயில்கள், மண்டபங்கள் நிறைந்த நகரமாகும்.
* **கி.பி 100:** பல உள்நாட்டுக் கலவரங்கள் ஆரம்பமாகின. மாயன் நாகரிகம் முதன்முதலாக சரிவுப் பாதையில் காலெடுத்து வைத்தது.
* **கி.பி 900:** மேற்குப் பகுதிகளில் நகரங்கள் ஒவ்வொன்றாக மறைந்தன. மாயன் நாகரிக வீழ்ச்சியின் ஆரம்பம்.
* **கி.பி 1511:** கோன்ஸலோ குரேரோ (Gonzalo Gurrero) என்ற ஸ்பானியர் புயலில் சிக்கி மாயன் பகுதியில் இறங்கினார்.
* **கி.பி 1517:** ஸ்பெய்ன் நாடு மாயன் மக்கள் மீது போர்தொடுத்து, 90% மாயன் மக்களைக் கொன்றொழித்தது. அதனால், மக்கள் மாத்திரமன்றி, அவர்களின் கலாசாரமும் மறைந்தது.



கைதிகள் மதகுருமாரினால் தண்டனைக்குட் படுத்தப்படும் காட்சியை சித்தரிக்கும் படம்

## உணவும் உடையும்

மாயன் மக்களின் பிரதான உணவாக சோளமும் பிரதான பானமாக கொக்கோவும் இருந்தது. உணவில் உப்பு முக்கியமாக சேர்க்கப் பட்டது. காய்கறி, இறைச்சி போன்றவற்றை உப்பில் இட்டுப் பதப்படுத்தினார்கள். பருத்தி கம்பளி, சணல், கற்றாழை நார் போன்றவற்றால் நெய்யப்பட்ட உடைகளை அணிந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மத வழிபாடுகள்

மத நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் மாயன் மக்களிடத்தில் முக்கிய இடத்தை வகித் தன. மழை, காற்று, பிறப்பு, இறப்பு, ஆகாயம், கல்வி, சூரியன், சந்திரன், அன்பு, வியாபாரம், பாதாள உலகம் என 166 கடவுள்கள் இருந்தன. மிகப்பிரமாண்டமான கோயில்களைக் கட்டி, அடிக்கடி திருவிழாக்களை நடத்தினர். விலங் குகள், கைதிகள், அடிமைகள், குழந்தைகள் என பலிகள் சாதாரணமாக நடந்தன.

## கலைத்துறை

மன்னர்களின் அரண்மனைகள், கோயில்கள், எகிப்திய பிரமிட் போன்ற கட்டடங்கள் கலை நயத்தோடு நிர்மாணிக்கப்பட்டன. மனித உரு வங்கள் துல்லியமாக செதுக்கப்பட்டன. மனித சக்தியே கட்டடங்களை உருவாக்கப் பயன்பட் டது. கருங்கல், நீர் கலந்த சுண்ணாம்பு ஆகிய வையே கட்டட மூலப் பொருட்களாக விளங்கின.

மாயன்கள் அற்புதம் நிறைந்த சிற்பங்களைக் கல்லிலும் மண்ணிலும் உருவாக்கினார்கள். விதவிதமான மட்பாண்டங்களைச் செய்தார்கள். பீங்கான், பாத்திரங்கள், மரப்பட்டைகள் என்பன வற்றில் கடவுள்கள், இயற்கைக் காட்சிகள், மிருகங்கள், பறவைகள் என ஓவியங்களைத் தீட்டினார்கள். தங்கத்தில் ஆலய மணிகளையும் கடவுள்களின் வடிவத்தில் முகமூடிகளையும் செய்தார்கள்.

மாயன் மக்களின் எழுத்து சித்திர எழுத்தாகும். இவற்றில் முந்நூறு குறியீடுகள் இருந்தன. கல் வெட்டுகள், மான்தோல் மற்றும் மர இலைகளால் தயாரிக்கப்பட்ட காகிதம் ஆகியவற்றில் இந்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி, தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

## வானியல் அறிவு

இம்மக்களின் வானியல் தொடர்பான அறிவு வியக்கத்தக்கது.



சூரிய, சந்திர இயக்கங்களைப் பதிவு செய்ய மாயன் மக்கள் வான் ஆய்வுகூடங்களை அமைத் திருந்தனர். இவற்றில் தொலைநோக்கிகள் போன்ற கருவிகளும் இருந்தன. 1945க்குப் பின்னர்தான் விஞ்ஞானிகளால் 'பால்வீதி' (Milkyway) பற்றித் தெரிந்துகொள்ள முடிந்தது. ஆனால், அதற்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மாயன் மக்கள் பால்வீதி பற்றி அறிந்திருந்தார்கள்.

## நாட்காட்டிகள்

பல்வேறு நாட்காட்டிகள் பாவனையில் இருந்தன. அதில் ஒரு நாட்காட்டியானது, 365 நாட்களைக் கொண்டது. ஆண்டுக்கு 18 மாதங்கள். ஒவ்வொரு மாதமும் 20 நாட்களை கொண்டிருந்தது. இதனை 'ஹாப்' (Haab) என அழைத்தனர். இதன்படி, வருடத்தில் 360 நாட்கள் சாதாரண நாட்களாகவும் எஞ்சிய 5 நாட்களை அதிர்ஷ்டம் இல்லாத நாட்கள் என்றும் கருதினர். கி.மு 550 இல் இந்த நாட் காட்டி முறை வந்திருக்கலாம் என கருதப்படுகின்றது. மற்றொரு வகை நாட்காட்டியில் மொத்தம் 260 நாட்கள். ஒவ்வெரு ஆண்டும் 13 மாதங்களைக் கொண்டது. மாதமொன்றில் 20 நாட்கள்.



ஹாப் நாட்காட்டி

இதற்கு ' ஸோல்கின்' (Tsolkin) என்று பெயர். இது 'புனித நாட்காட்டி' என்று அழைக்கப்பட்டது. மாதமொன்றின் 20 நாட்களுக்கும் 20 கடவுள்களின் பெயரை வைத்திருந்தனர்.

## நாகரிகத்தின் வீழ்ச்சி

இரு பிரதான காரணங்கள் மாயன் நாகரிகத்தின் மறைவுக்கு வித்திட்டன. மாயன் மக்கள் தமது இயற்கைச் சூழலைக் காப்பாற்றுவதில் அக்கறை செலுத்தவில்லை. காடுகள் நிறைந்த தமது பகுதிகளில் மரங்களை வெட்டிச் சாய்த்தார்கள். இதனால், மழை குறைந்து வறட்சி, பஞ்சம், பட்டினி, நோய்கள் என்பன பெருகின. மாயன் சமுதாயம் இவற்றுக்குப் பலியாகின.

அடுத்த காரணம், 15 ஆம் நூற்றாண்டில் படையெடுத்த ஸ்பானியர்கள் 90% மாயன் மக்களை கொன்றொழித்தனர். எஞ்சியவர்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு தொலைவிலுள்ள பேரு நாட்டுக்கு உயிர் தப்பிச் சென்றனர். மாயன் மக்கள் அழிந்ததனாலும் சொந்த இடத்தைவிட்டு ஓடியதன் காரணமாகவும் மாயன் நாகரிகமும் கலாசாரமும் காலப்போக்கில் மறைந்துபோயின.



தற்காலத்தில் வாழும் மாயன் வழித்தோன்றல்கள்



# விசித்திர வழக்கு

முல்லா நஸ்ருதீன் சட்டம் பயில்வதற்கு ஆசைப்பட்டார். ஆனால், போதிய பொருளாதார வசதி அவரிடம் இருக்கவில்லை. ஒரு சட்ட நிபுணரை அணுகி சட்டம் சொல்லித் தருமாறு முல்லா கேட்டார். அதற்கு அவர், "சட்டம் பயின்று முடித்து முதல் வழக்கை நடத்தி வெற்றி கண்டதும் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து எனக்குரிய சம்பளத்தைக் கொடுக்க வேண்டும்" என்றார். முல்லாவும் அதற்கு ஒத்துக்கொண்டார்.

முல்லா சட்டம் பயின்றாரே ஒழிய நீதிமன்றம் சென்று வழக்கறிஞர் தொழிலை நடத்தவில்லை. தமக்குரிய சம்பளம் வராததால் சட்டம் சொல்லிக் கொடுத்தவர் முல்லாவின் மீது வழக்குத் தொடுத்தார்.

நீதிமன்றத்திற்கு முல்லா வந்தார். விசாரணை தொடங்கியது.

அப்பொழுது முல்லா குறுக்கிட்டு, "மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே! இந்த வழக்கு விசாரணையே தேவையற்றது. ஏனென்றால், இந்த வழக்கில் நான் வெற்றி பெற்றாலும் அல்லது தோல்வியுற்றாலும் ஆசிரியருக்குப் பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை" என்றார்.

"அது எப்படி?" என்று வினவினார் நீதிபதி.

"நீதிபதி அவர்களே! ஆசிரியருக்கு நான் பணம் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்று நீங்கள் தீர்ப்பு வழங்கினால், இந்த வழக்கில் நான் வெற்றி பெற்றுவிடுவேன். அதன் பின்னர் ஆசிரியருக்கு நான் பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை"

"ஒருவேளை இந்த வழக்கில் நான் தோல்வியடைந்தாலும் பணம் தர வேண்டியதில்லை. ஏனென்றால், முதல் வழக்கில் நான் வெற்றி பெற்றால்தான் ஆசிரியருக்கு சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என்பது எங்களிடையே உள்ள ஒப்பந்தம்!" என்று தர்க்க ரீதியாக வாதிட்டார் முல்லா. நீதிபதி வேறு வழியின்றி வழக்கினைத் தள்ளுபடி செய்தார்.

**தொகுப்பு:**
**றிஸ்வானா ரவுஃப்,**
**தரம் - 11,**
**கொமேகொட மு.வித்.,**
**ஹெம்மாதகம.**



# விஞ்ஞானமும் மனித வாழ்வும்

கானகங்களின் இருண்ட குகைகளுக்குள் அன்று வாழ்ந்தான் மனிதன். நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டிய காலம் போய் தம் பிள்ளைக்கு நிலாவுக்குப் போய் சோறூட்டுவதாக கூறுகிறான் இன்றைய மனிதன். இத்தகைய வியத்தகு முன்னேற்றத்தை விஞ்ஞானம் ஏற்படுத்தி இருக்கின்றது.

அன்றைய மனிதன் கல்லையும் கல்லையும் உரசி நெருப்பை உருவாக்கி உணவை வேக வைத்து உண்ணப்பழகினான். அவன் மிருகத்தோலை அணிந்த நாட்கள் மலையேறி தங்கமும் வெள்ளியும் ரத்தினமும் கலந்த நவீன ஆடைகளை அணியும் அளவிற்கு விஞ்ஞானம்,பூமித்தாயின் புதல்வர்களை உயர்த்தியது.

மிருகநிலையில், நாடோடிகளாக வாழ்ந்த மனிதனை, படிப்படியாக முன்னேற்றி அவனது சமூக, கலாசாரப் பண்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி நாகரிகமடையச் செய்த பெருமை விஞ்ஞானத்தையே சாரும்.

அந்தவகையில் கல்வி, மருத்துவம், தொழில்நுட்பம், அறிவியல், போக்குவரத்து என்று அனைத்துத் துறைகளிலும் இன்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சந்திரனில் மனிதன் காலடி வைத்தது முதல் விஞ்ஞான ஆய்வுகள் மேலும் விரிவுபடலாயிற்று. செவ்வாயில் ஜீவராசிகள் வாழ்கின்றனவா? என்று தேடும் உலகம் விண்ணியலிலும் தொடர்பாடலிலும் நவீன முன்னேற்றம் கண்டது. நவீன இத்தொலைத்தொடர்பு சாதனங்களால் மாணவர்கள் நன்மை அடைகின்ற அதேவேளை, இவற்றின் தவறான பயன்பாட்டால் ஒழுக்க சீர்கேடுகளுக்கு இவை மூலகாரணமாக இருப்பதும் மறுப்பதற்கில்லை.

ஒழுக்கச் சீர்கேடுகளால் சமூகம் தம்



பண்பாட்டுக் கூறுகளை இழந்து விடவும் விஞ்ஞானம் அறிந்தோ, அறியாமலோ காரணமாகிவிட்டது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல, எந்த ஒரு செயலுக்கும் எதிர் விளைவுகள் உண்டென்பதில் ஐயமில்லை. இதற்கு விஞ்ஞானமும் விதிவிலக்காக இருப்பதில்லை. அந்த வகையில், மனித வாழ்வோடு இரண்டற இணைந்த விஞ்ஞானத்தில் நன்மையும் தீமையும் கலந்திருக்கின்றன. இதனால், நல்லதை நாடி., தீயவற்றை விலக்கல் அறிவுடையோர் கடமையாகும்.

**ரிஸ்மியா அலி நஸீர்,**
**போகஹகும்புறை மு.வித்.,**

# அன்பு

★ அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள். -ட்ரைடன்

★ அன்பு கடவுளின் வடிவம். -லூதர்

★ அன்பு சர்வலோக சஞ்சீவி. -இராசாசி

★ அன்பாகிய அக்கினியில் எவ்வளவு கடினமான மனமும் இளகியே தீரும். -காந்தியடிகள்

★ அன்பு நீடிய சாந்தமும், பொறுமையும் உள்ளது. அதற்குப் பொறாமை என்பதே இல்லை. -விவிலிய நூல்

★ அன்பு செய்தால் அல்லல் தீரும். அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும். அமைதி பெருகினால் அதுவே. சுவர்க்கம். -பெ.தூரன்

★ வாழ்வின் மிகச் சிறந்த இன்பம் நாம் அன்பு கூரப்படுகிறோம் என்பதுதான். -விக்டர் கியூகோ

தொகுப்பு: நி.ப.அய்மா
கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை.



# எங்கள் வீட்டுப் பூனை

எங்கள் வீட்டுப் பூனை
மியாவ் மியாவ் பூனையாம்
மிரட்டும் மீசைப் பூனையாம்
எலியை விரட்டும் பூனையாம்
எங்கள் வீட்டுப் பூனையாம்!

காய்ச்சி வைத்த பாலையே
திருடிப் பருக ஓடுமே
ஓய்ச்சல் இன்றி எப்பவும்
மியாவ் சத்தம் போடுமே!

பரண்மேல் ஏறித் தூங்கிடுமே
பழைய சாமானை உருட்டிடுமே
சிறார்கள் ஏறி விரட்டினால்
சீறிப் பாய்ந்து மிரட்டிடுமே!

உடம்பு முழுதும் கோடுதான்
புலியைப் போல் இருக்குது
நடந்து வரும் போதிலே
நமக்கும் பயம் வருகுதே!

# தமிழுக்குத் தொண்டு செய்த வீரமாமுனிவர்

தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த ஐரோப்பியர்களில் அறிஞர் வீரமாமுனிவர் குறிப்பிடத்தக்கவராவார். 'கொன்ஸன்டைன் ஜோசப் பெஸ்கி' என்னும் இயற்பெயரைக் கொண்ட இவர் இத்தாலியைச் சேர்ந்தவராவார். கத்தோலிக்கத் துறவியான இவர் சமயத்தைப் பரப்புவதற்காக இந்தியாவுக்கு வந்தார்.

இவர் தமிழ் நாட்டிற்கு வந்தபோது தனது பெயரை 'தைரியநாதசுவாமி' என மாற்றிக்கொண்டார். இவரது தமிழ்ப்புலமையைக் கண்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர், இவருக்கு 'வீரமாமுனிவர்' எனப் பெயரிட்டனர். இவர் சுப்பிரதீபக் கவிராயரிடம் முறையாகத் தமிழை கற்றுத் தேர்ச்சி பெற்றார். தெலுங்குமொழி,வடமொழி ஆகியவற்றையும் கற்றுக்கொண்டார். தென்னிந்தியாவில் உள்ள திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், திருச்சி ஆகிய இடங்களில் தங்கியிருந்த இவர், தமிழ் அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு, தமது தமிழறிவை விருத்தி செய்துகொண்டார்.



வீரமாமுனிவர் பரமார்த்த குரு கதை, வேதியரொழுக்கம், வேதவிளக்கம் ஆகிய உரைநடை நூல்களையும் தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அடைக் கல மாலை முதலிய செய்யுள் நூல்களையும் தொன்னூல் விளக்கம், இலக்கணத் திறவுகோல் முதலிய இலக்கண நூல்களையும் சதுரகராதி, தமிழ், இலத்தீன் அகராதி ஆகிய அகராதிகளையும் இயற்றினார்.

திருக்குறள், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி ஆகிய நூல்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட இவர், சீவகசிந்தாமணியைப் போல் ஒரு காப்பியம் இயற்ற எண்ணினார். அதன் பயனாக எழுந்த காவியம் தான் தேம்பாவணி. தமிழுக்கு அரும்பெரும் தொண்டுகள் பல செய்த வீரமாமுனிவர் 1747 பெப்ரவரி 4 இல் அமரரானார்.

**தொகுப்பு: என்.எப்.அய்மா,**
**கமு/அல்-ஹம்றா வித்.,**
**மருதமுனை.**

# நற்சிந்தனை

★ அனைத்திலும் நல்லுபதேசி மனச்சாட்சி.
★ அனைத்திலும் நல்ல மருந்து தன்னம்பிக்கை.
★ அனைத்திலும் அதிக கஷ்டம் தரக்கூடியது கடன்.
★ அனைத்திலும் பெரும் பாக்கியமும் சந்தோஷமும் தருவது நோயற்ற வாழ்வு.
★ அனைத்திலும் நல்லது உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்ளல்.
★ அனைத்திலும் கூடாத காரியம் கோபம்.
★ அனைத்திலும் நற்பெயர் தருவது கொடை.
★ அனைத்திலும் அழியாப் பெருஞ்செல்வம் கல்வி.
★ அனைத்திலும் அதிக சக்தி வாய்ந்தது இனிய பேச்சும் இரக்கமும்.
★ அனைவரிலும் பெரிய வீரன் கோபத்தை அடக்குபவன்.
★ அனைவரிலும் பெரிய அறிவிலி உபகாரத்திற்குப் பதிலாக உபத்திரவம் செய்பவன்.
★ அனைவரிலும் அற்பப் புத்தியுள்ளவன் செய்த நன்றியை மறப்பவன்.
★ அனைவரிலும் அதிகம் கெட்டவன் புறம் பேசுபவன்.
★ அனைவரிலும் மோசக்காரன் நயவஞ்சகன்.
★ அனைத்திலும் மன்னிக்கமுடியாத குற்றம் இறைவனுக்கு இணை வைப்பதேயாகும்.

தொகுப்பு: பாத்திமா முவஃபிக்கா,
தெலியாகொன்ன, குருணாகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லி மலை



இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையில் புதிய பல்லி இனமொன்றை வராட்கிரி என்ற ஆய்வாளர் கண்டறிந்துள்ளார். இதற்கு Cnemasspis kolhapurensis என் பெயரிடப்பட்டுள்ளது. ஏனைய பல்லியினங்களின் கண்களைப் போல் நீள்வட்டமாக இல்லாமல், இந்தப் பல்லியின் கண்கள் வட்டமாக உள்ளன. அத்துடன், உலகிலேயே வேறு எங்கும் இதுபோன்ற பல்லியினம் கண்டறியப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதுபோன்ற புதிய பல்லி இனம் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது இது மூன்றாவது தடவை. ஏற்கனவே இங்கு Dactlyus sataraensis மற்றும் Hemidactylus aaronbaueri என இரண்டு பல்லியினங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தொடர்ந்து புதிய பல்லி இனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஆராய்ந்தறியக்கூடியதாக இருக்கலாம் என்பதால் அந்த மலையை 'பல்லி மலை' எனவும் குறிப்பிடுகின்றார்கள்.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3279
எஃப்.ஹனா, தரம் - 6, பொலன்னறுவை மு.ம.கல்., பொலன்னறுவை.


அங்.இல: 3280
ஜெ.அபிநயா, தரம் - 3, தமிழ் ம.ம.வித்., பதுளை.


அங்.இல: 3281
ந.தர்சன், தரம் - 9, இந்துக் கல்., திருகோணமலை.


அங்.இல: 3282
க.சிறிவர்ணா, தரம் - 11, கேவில் அ.த.க.பாட., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3283
சி.டனிஸ்மேனன், தரம் - 7, புனித ச.ஆ.தே.பாட., மன்னார்.


அங்.இல: 3284
எஸ்.கே.அருண், தரம் - 8, யா/நெ.ம.ம.வித்., நெல்லியடி.


அங்.இல: 3285
ஜி.ஹரிபிரசாத், தரம் - 3, க/சிவானந்த த.வித், ஹந்தான.


அங்.இல: 3286
எஃப்.சபியா, தரம் - 6, செய்னப் ம.ஆ.பா., புத்தளம்.


அங்.இல: 3287
எம்.ஸாபித், தரம் - 7, ஸாஹிரா தே.பாட., மாவனல்லை.


அங்.இல: 3288
எஃப்.ஹஸீனா, தரம் - 8, ஜமியுல் அஸ்ஹர் ம.கல்., கண்டி.


அங்.இல: 3289
அயாஸ் அஹமட், தரம் - 5, வெலம்பொட மு.ம.வித். வெலம்பொட.


அங்.இல: 3290
எஃப்.ஸப்ரா, தரம் - 11, அல்-ஹிதாயா ம.வித்., வெள்ளம்பிடிய.


அங்.இல: 3291
வ.மதிஷாந், தரம் - 6, இந்து தே.கல்., மாத்தளை.


அங்.இல: 3292
எஃப்.சஹாமா, தரம் - 6, மின்ஹாத் தே.பாட., மாத்தறை.


அங்.இல: 3293
அப்துல் மாஜித், தரம் - 11, அல்-பலாஹ் ம.வித்., பலகத்துறை.


அங்.இல: 3294
எம்.வாசில், தரம் -11B, தி/கிண்ணியா ம.கல்., கிண்ணியா.


அங்.இல: 3295
செ.கஜேந்தினி, தரம் - 11, கிளி/பரந்தன் இ.ம.வித்., பரந்தன்.


அங்.இல: 3296
ஜீ.சிறிதரன், தரம் - 10, புங்குடுதீவு ம.வித்., புங்குடுதீவு.


அங்.இல: 3297
ம.சுஜீவன், தரம் - 9, வவுனியா த.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3298
எம்.ஃபேஸல், உயர் தரம் (கலை), ஜிஃப்ரியா அ.கல்., காலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ முதலாம் பரிசு
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ இரண்டாம் பரிசு
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ மூன்றாம் பரிசு
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ 10 ஆறுதல் பரிசுகள்
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 13.01.2010 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 26
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1வி | ல | 2ங் | கு | 3க | ள் |
| ள | ■ | கை | ■ | ங் | ■ |
| க் | ■ | த | ■ | கா | ■ |
| 4கு | கை | ■ | 5அ | ரு | 6வீ |
| ■ | ■ | ■ | ன | ■ | யா |
| 7ஆ | ற் | ற | ல் | ■ | தி |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 24 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
செ.பாத்திமா சுஜைதா,
202A, மீராநகர் வீதி,
நிந்தவூர்-1.

**இரண்டாம் பரிசு**
ஜே.ஆன் ஜெரோசினி,
61/24 E,
ஜிந்துப்பிட்டி வீதி,
கொழும்பு-13.

**மூன்றாம் பரிசு**
கோ.போசகாந்,
52, திருவள்ளுவர் ரோட், தோணிக்கல்,
வவுனியா.

### ஆறுதல் பரிசுகள்

என்.ஜனூஷா பர்வின்,
80-6 நாகூர் மஸ்ஜித் ரோட், புத்தளம்.

செ.குரிஜா,
41/1 பிரம்படி வீதி,
கொக்குவில்.

நபாஸ் நைஸர்,
286, 7ஆம் கட்டை,
மாத்தளை வீதி,
அக்குறனை.

டி.லக்ஷிகா,
20/13 பண்டாரநாயக்க சதுரம், தலவாக்கலை.

யு.எச்.எப்.பஸ்ரின்,
4ஆம் லேன்,
அல்-மனார்
மண்டலக்குடா, கல்பிட்டி.

எஸ்.சாலிஹா,
10, சென்கூம்ஸ் தோட்டம்,
தலவாக்கலை.

பா.பர்ஹா,
125, வெலிபிடி மோதற,
கிந்தொட்டை,
காலி.

ம.குமுதினி,
பூனுகல தோட்டம்,
எட்டியாந்தோட்டை.

எம்.என்.எப்.நிப்ரா,
206, புஸ்ஸல்ல,
பறகடுவ.

ஆர்.சதுர்ஷினி,
440/7, மாமுதுன,
அலவதுகொட.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 து |
| | ■ | ■ | 4 | | |
| 5 | | ■ | ■ | ■ | |
| ளி | ■ | 6 | | 7 | |
| ■ | ■ | | ■ | | ■ |
| 8 | று | | ■ | 9 | |

பெயர் : ..........
வீட்டு முகவரி : ..........
..........
தொலைபேசி இல : ..........
பாடசாலை : ..........
அருகிலுள்ள நகரம் : ..........
மாவட்டம் : ..........

### மேலிருந்து கீழ்

1. கேரள நாட்டியக் கலையொன்று.
2. தாகம் தீர்க்க உதவும். (தலைகீழ்)
3. மூக்கினுள் தூசு, துகள் சென்றாலும் இது ஏற்படுவதுண்டு.
6. விளையாட்டுப் பொருள் ஒன்று.
7. பொழுதைப் போக்கவும் இதைக் கொறிப்பதுண்டு.

### இடமிருந்து வலம்

1. அழுகையின்போது கண்களிலிருந்து வெளிப்படுவது.
4. நிறங்களில் ஒன்று.
5. குழந்தைகளுக்கு இதைச் சொல்லியும் உணவூட்டுவதுண்டு.
6. அடுத்த வாரத்தைத் தொடர்ந்து வரவிருக்கும் ஓர் இந்துப் பண்டிகை.
8. சகிப்புத் தன்மைமிக்க குணம்.
9. கௌரவிக்கவும் இது சூடுவதுண்டு. (திரும்பி இருக்கிறது)




விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

வியாங்கல்லை 'லிட்டில் ரோஸ்' பாலர் பாடசாலையின் முதலாவது கலைவிழா அண்மையில் வியாங்கல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மேடையேறிய மாணவர்களின் கலை நிகழ்வுகள் சிலவற்றையே படத்தில் காண்கிறீர்கள். *(தகவல்: எஃப்.நஸ்ரா-ஆசிரியை)*

**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**



பொ.ஆனந்தகுமார், தரம் - $7^{A}$, நு/கிறேட்வெஸ்டன் த.வித்., கிறேட்வெஸ்டன்.



ஏ.எம்.எம்.ரிபாட், தரம் - $9^{C}$, அ.ம.கல்., அக்குறனை.



அர்ஷாட் அஹமட், தரம் - $3^{B}$, புனித ஜோன் பொஸ்கோ கல்., ஹட்டன்.



அமானா சுர்பா, பாலர் வகுப்பு, ஷைல்ட் ஃபஸ்ட் பாலர் பாட., மருதமுனை.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

**முடிவுத்திகதி 15.01.2010**

**மார்ச் மாதத்துக்கான தலைப்புகள்**

- ★ தரம் 1-5 - வாத்து அல்லது அன்னாசி
- ★ தரம் 6-8 - கப்பல் அல்லது கம்பளம் ஒன்றுக்கான அலங்காரம்
- ★ தரம் 9-11 - கடற்கரைக்காட்சி அல்லது கோழியும் குஞ்சும்

அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!


நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### ஐஸ்பழம்



மொஹமட் முஷாரஃப், தரம் - 3, புனித அந்தோனியார் ஆ.கல்., கண்டி.



எம்.ஐ.எம்.ஆதீப், தரம் - 2, கா/ஹிரிம்புர சுலைமானியா ம.வித்., ஹிரிம்புர.

### எனது வீடு



உ.கோகிலப்பிரியா, தரம் - 1, யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்., மானிப்பாய்.



என்.கிருஷாந்தினி, தரம் - $5^{C}$, க/கதிரேசன் இ.ம.கல்., நாவலப்பிட்டி.

### எனது ஆசிரியர்



ஜ.மாதங்கி, தரம் - $6^{B}$, வேம்படி பெ.உயர் கல்., யாழ்ப்பாணம்.



எம்.ஐ.றஉசன் வானு, தரம் - $7^{A}$, அல்-ஜாயிஸ்ஸா வித்., ஒலுவில்.

### மாட்டு வண்டி



ச.சிவதர்ஷன், தரம் - $7^{B}$, கொ/இந்துக் கல்., பம்பலப்பிட்டி.



சு.சுலக்ஷிதா, தரம் - $8^{A}$, புனித கப்ரியல் ம.கல்., ஹட்டன்.

### மரங்கள் நடுவோம்



ஆயிஷா சஃபீகா, தரம் - $9^{B}$, ஆமினா பெ.தே.பாட., மாத்தளை.



எம்.எஸ்.எம்.மலிக், தரம் - 10, கொடேகொடை மு.வித்., ஹெம்மாதகம.

### மீன் வியாபாரி



நிஷாத் அலி, தரம் - 10, டீ.டி.ஏ.கல்லூரி.



ஹஸ்னா ஏ.சலாம், தரம் - $9^{C}$, மு.ம.அ.கல்., கல்-எளிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

சர்வதேச தகவல் தொலைத்தொடர்பு சங்கம் எனப்படும் ITU (International Telecommunication Union) அமைப்பானது ஐக்கியநாடுகள் சபையின்கீழ் இயங்குகின்ற மிகவும் பழைமையான ஒரு நிறுவனமாகும். இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

தகவல் தொலைத்தொடர்பு வலைப்பின்னல் விரிவுபடுத்தல், உலகமயமாக்கல் ஊடாக சமூகத்தில் தகவல்துறை ஆர்வத்தை ஏற்படுத்தி அதன் பயனை ஒவ்வொரு நபரும் பெறச் செய்வதே இந்த அமைப்பின் பிரதான நோக்கங்களாகும். 1865 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி பிரான்ஸில் 'சர்வதேச தந்திச் சேவைகள் சங்கம்' என்ற பெயரிலேயே இந்த அமைப்பு முதன்முதலாக அறிமுகமாகியது. நாளடைவில் தொழில்நுட்ப வளர்ச்சியை அடியொட்டி நாடுகளுக்கிடையே தொலைத் தொடர்பு வலைப்பின்னலை ஏற்படுத்தும் வகையில் 'சர்வதேச தகவல் தொலைத்தொடர்பு சங்கம்' என்று இதன் பெயர் மாற்றப்பட்டது.

மேற்படி, தகவல் தொலைத்தொடர்பில் அடங்குகின்ற பிரதான அம்சங்கள் வருமாறு;

- Radio Communication (ITU-R)
  வானலைத் தொடர்புகள்





தலைமைச் செயலாளர்

- Standardization (ITU-T)
  தரப்படுத்தல்
- Development (ITU-D)
  அபிவிருத்தி மற்றும் ஒலிபரப்புக்கள்
- ITU Telecom - ITU
  டெலிகொம்

இந்த அமைப்பினை தலைமைச் செயலாளர் ஒருவர் நிர்வகிப்பார். இதன்படி, தற்போதைய தலைமைச் செயலாளர் ஹெமடவுன் டுவரே என்பவராவார். மேலும், இந்த அமைப்பின் ஏனைய பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அந்தந்தப் பிரிவுகளுக்கெனப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பர்.

### சட்டதிட்டங்கள்

முழுமையான அதிகாரங்களைக் கொண்ட சம்மேளனமொன்றினால் ITU வின் சட்டதிட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

ITU வின் தலைமைச் செயலாளர் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை தெரிவுசெய்யப்படுவார். அங்கத்துவ நாடுகளினாலேயே தலைமைச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

### அங்கத்துவம்

ITU வில் நாடுகள் மட்டுமன்றி, தனியார் அமைப்புக்களும் அங்கத்துவம் வகிக்கின்றன. இத்தனை கட்டுக்கோப்புடன் இயங்குகின்ற மேற்படி அமைப்பானது உலக நாடுகளில் தகவல் தொலைத்தொடர்புத்துறை வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான பாரிய பங்களிப்பைச் செலுத்தி வருகின்றது.

# காலநிலை மாநாடு வெற்றியைத் தரவில்லை

டென்மார்க் நாட்டின் தலைநகரமான கோபன்ஹேகனில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு உரிய இலக்கை அடையாமல் முடிவுற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரியமிலவாயு வெளியேற்றத்தை அடுத்துவரும் நாற்பது வருடங்களுக்குள் கட்டுப்படுத்துவதன் மூலமே காலநிலை மாற்றத்தில் இருந்து உலகிற்கு ஏற்படும் அழிவைத் தடுக்கமுடியும். அந்தவகையில், உலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காகவே குறித்த மாநாடு நடைபெற்றது. குறிப்பாக சீனா, இந்தியா ஆகிய



வளர்முக நாடுகளே அதிகமாக கரியமில வாயுவை வெளியேற்றும் நாடுகளாக இருந்துவருகின்ற போதிலும் மேற்படி திட்டத்தில் இணைவதற்கு இந்த நாடுகள் பின்வாங்கிவிட்டன.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் முன்வைத்த யோசனையை ஏற்க முடியாது என்று தெரிவித்தே சீனா, இந்தியா, தென்ஆபிரிக்கா, பிரேஸில் ஆகிய வளர்முக நாடுகள் மேற்படி மறுப்பைத் தெரிவித்துள்ளன.

இருப்பினும், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மேற்கொண்ட தனிப்பட்ட முயற்சியின் காரணமாக ஒருசில விடயங்களில் இந்த நாடுகளுடனான இணக்கத்தைப் பெற்று மேற்படி ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இந்த மாநாடு பூரண வெற்றியைத் தரவில்லை என்பதே ஒட்டுமொத்தக் கருத்தாக உள்ளது.

# கடலில் இரைச்சல் அதிகரிப்பால் உயிரினங்கள் அழியும் ஆபத்து



திமிங்கிலம், டொல்பின் போன்றவை உட்பட பல கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றன என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழல் பாதிப்பானது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் கடல் பகுதிகளில் இரைச்சல் தன்மை அதிகரித்துள்ளதாக ஆய்வுகளின்மூலம் தெரியவந்திருப்பதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கடலில் இரைச்சல் அதிகரிப்பானது கடலில் வாழ்கின்ற உயிரினங்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடலில் காணப்படுகின்ற வேதிப்பொருள் குறைவடைந்து வருவதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாம். அதாவது, பொதுவாகவே கடலில் மழை, அலை, உயிரினங்களின் ஒலிகள், கப்பல் ஒலிகள் என பலவித ஒலிகள் எழுப்பப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. எனினும், கடலில் காணப்படுகின்ற குறித்த வேதிப்பொருள் இந்த ஒலி அலைகளை உள்ளீர்த்துக் கொள்கின்றன. இதனால், கடலில் ஒலி வீச்சுக் குறைவடைந்து விடுகின்றமையால் கடல்வாழ் உயிரினங்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை.



எனினும், தற்போது கடலில் ஏற்படுகின்ற அமிலமயமாக்கலினால் கடலிலுள்ள இந்த வேதிப்பொருள் குறைந்து வருகின்றது. காபன்டொக்ஸைட் அதிகரிப்பினாலேயே இந்நிலை ஏற்படுகின்றதாம். கப்பல் போக்குவரத்து அதிகரிப்பினாலேயே கடலில் காபன் டொக்ஸைட் அதிகம் கலக்கின்றது. இதன் பெறுபேறாக ஒலியின் பெறுமானம் அதிகரிக்கின்றமையால் கடலில் ஒலியின் வீச்சு நேரடித் தாக்கத்தை விளைவிக்கின்றது. இதன்மூலம்

# குற்றங்கள் இல்லாத கட்டார்

உலகிலேயே குற்றச்செயல்கள் மிகக் குறைவாக நடக்கின்ற நாடு கட்டார் நாடுதானாம். கொலை, கொள்ளை, வழிப்பறி, கடத்தல் என்ற எந்தவொரு குற்றச் செயலும் மிகக் குறைந்தளவு விகிதாசாரத்திலேயே அங்கு நடைபெறுகின்றது.



அண்மையில் உருவாக்கப்பட்ட அல்-ஃபஸா என்ற குற்றவியல் தடுப்புப் படையின் கண்காணிப்பின் காரணமாகவே அங்கு இந்தளவிற்கு குற்றச் செயல்கள் குறைவடைந்திருப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 237

**கேள்வி:** கப்பல் போக்குவரத்தினால் கடலில் என்ன கலக்கப்படுகின்றது?

சரியான விடை.......................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 237,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 235 இன் சரியான விடை: பீ17பீ**

**பரிசு பெறுவோர்**

சா.ஷிரீன்,
525/A, ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது-07.

க.இந்துஜா,
24, 7 ஆம் ஒழுங்கை, சென் பெனடிக்ட் மாவத்தை, கொழும்பு-13.

எஃப்.ஜெஸ்னியா,
36F, ரிஸ்னா மன்ஸில், கஹட்டோவிட, வெயங்கொட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

අම්මා: පුතා නැගිටින්න. අද සම්මුඛ පරීක්ෂණයට යන්න තියෙනවානේ.
புதா நெகிடின்න. அத சம்முக பரீக்ஷணயட யன்ன தியெனவானே.
அம்மா: மகன் எழும்புங்கள். இன்று நேர்முகப் பரீட்சைக்குப் போக வேண்டும்தானே.

පුතා: දැන් වෙලාව කීයද අම්මේ?
தென் வெலாவ கீயத அம்மே?
மகன்: இப்போது நேரம் என்ன அம்மா?

අම්මා: උදේ පහමාරයි. සම්මුඛ පරීක්ෂණය කීයටද?
உதே பஹமாரய். சம்முக பரீக்ஷணய கீயடத?
அம்மா: காலை ஐந்தரை மணி. நேர்முகப் பரீட்சை எத்தனை மணிக்கு?

පුතා: උදේ නවයයි තිහට අම්මේ.
உதே நவயய் திஹட அம்மே.
மகன்: காலை ஒன்பது முப்பது மணிக்கு அம்மா.



අම්මා: ආ.... තව වෙලා තියෙනවා.
ஆ.... தவ வெலா தியெனவா.
அம்மா: ஆ.... இன்னும் நேரம் இருக்கின்றது.

ඒත් වෙලාවට යන්න පුතා.
ஏத் வெலாவட யன்ன புதா.
ஆனாலும் நேரத்திற்குப் போங்கள் மகன்.

පුතා: ඔව් අම්මේ ටිකක් වේලාසන ගියාම හොඳයි.
ஒவ் அம்மே டிகக் வேலாசன கியாம ஹொந்தய்.
மகன்: ஆம் அம்மா கொஞ்சம் நேரகாலத்தோடு போனால் நல்லது.

මම නාගෙන එන්නම් අම්මේ.
மம நாகென என்னம் அம்மே.
நான் குளித்துவிட்டு வருகிறேன் அம்மா.

අම්මා: පුතා එන්න කෑම කන්න.
புதா என்ன கேம கன்ன.
அம்மா: மகன், சாப்பிட வாருங்கள்.



අම්මා: මම කිරිබත් හැදුවා පුතා.
மம கிரிபத் ஹெதுவா புதா.
அம்மா: நான் பாற்சோறு செய்தேன் மகன்.

අම්මා: ආ.... පුතා මේ කිරි එක බොන්න.
ஆ.... புதா மே கிரி எக பொன்ன.
அம்மா: ஆ..... மகன் இந்தப் பாலைக் குடியுங்கள்.

පුතා: මම ගිහිල්ලා එන්නම් අම්මේ.
மம கிஹில்லா என்னம் அம்மே.
மகன்: நான் போய்வருகிறேன் அம்மா.

අම්මා: හොඳයි පුතේ ඔයාට දෙවි පිහිටයි.
ஹொந்தய் புதே ஒயாட தெவி பிஹிடய்.
அம்மா: நல்லது மகன் உங்களுக்குக் கடவுள் துணை.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: மகன் எழும்புங்கள்.
පුතා නැගිටින්න.

i. நேரம் காலை ஒன்பது முப்பது.
..........................................................................
ii. மகன் சாப்பிட வாருங்கள்.
..........................................................................
iii. காலை உணவாகப் பாற்சோறு.
..........................................................................






இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் (Present Simple Tense) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களையும் முன்னைய பாடங்களில் தனித்தனியாகக் கற்றோம் அல்லவா? அவை இரண்டையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

★ ***ஆரம்பத்தில் இவற்றின் வினா வாக்கியங்களை அவதானிப்போம்.***

(அ) Did you go to school yesterday?
நீ நேற்று பாடசாலைக்குப் போனாயா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

(ஆ) Do you go to school daily?
நீ தினமும் பாடசாலைக்குப் போகின்றாயா?
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

---

(அ) Did they go to the library yesterday?
அவர்கள் நேற்று நூலகத்துக்குப் போனார்களா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

(ஆ) Do they go to the library daily?
அவர்கள் தினமும் நூலகத்துக்குப் போகின்றார்களா?
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

---

(அ) Did those children come to school yesterday?
அந்தச் சிறுவர்கள் நேற்றுப் பாடசாலைக்கு வந்தார்களா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

(ஆ) Do those children come to school daily?
அந்தச் சிறுவர்கள் தினமும் பாடசாலைக்கு வருகின்றார்களா?
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

---

(அ) Did you eat bread last night?
நீ கடந்த இரவு பாண் சாப்பிட்டாயா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

(ஆ) Do you eat bread every night?
நீ ஒவ்வொரு இரவும் பாண் சாப்பிடுவதுண்டா?
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

---

(அ) Did they eat bread last night?
அவர்கள் கடந்த இரவு பாண் சாப்பிட்டார்களா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

(ஆ) Do they eat bread every night?
அவர்கள் ஒவ்வொரு இரவும் பாண் சாப்பிடுவதுண்டா?
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

---

(அ) Did you drink coffee this morning?
நீ இன்று காலை கோப்பி குடித்தாயா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

(ஆ) Do you drink coffee every morning?
நீ ஒவ்வொரு காலையும் கோப்பி குடிப்பதுண்டா?
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

---

(அ) Did you stay there last night?
நீ கடந்த இரவு அங்கே தங்கினாயா?
(இறந்தகால தனி வாக்கியம்-Past Simple Tense)

(ஆ) Do you stay there every night?
நீ அங்கே ஒவ்வொரு இரவும் தங்குவதுண்டா?
(நிகழ்கால தனி வாக்கியம்-Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முள்ளை முள்ளால்...

ஓர் ஊரில் சுந்தரம் என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் அவனுடைய நண்பனான சரண் வீட்டிற்குச் சென்றான்."நண்பனே, என் மாமனாருக்கு உடல் நலம் சரியில்லை என்று செய்தி வந்துள்ளது. இதனால், நான் குடும்பத்துடன் அவசரமாக ஊருக்குச் செல்கிறேன். எமது ஊரில்திருட்டுப் பயம். ஆதலால் என்னிடமுள்ள மூவாயிரம் பொற்காசுகளை உன்னிடம் தருகிறேன். நான் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்" என்றான்.

அதற்குச் சரண், "என் வீட்டிலும் திருட்டு நடந்து விடுமோ என்று பயப்படுகிறேன். அதன் பின்பு பணத்தால் நமது நட்புக் கெட்டுவிடும். எனவே, நான் சொல்வதைக் கேள். நீ பொற்காசுகளை எடுத்துக் கொண்டு ஊருக்கு வெளியே உள்ள காளிகோவில் வேப்பமரத்தடியில் புதைத்து விடு. நீ திரும்பி வந்ததும் அதனை எடுத்துக் கொள்ளலாம்" என்றான்.

சுந்தரமும் அதற்கு ஒப்புக் கொண்டு, பணத்தை சரண் குறிப்பிட்ட வேப்பமரத்தடியில் புதைத்தான். பின்பு தனது குடும்பத்துடன் ஊருக்குப் போய் விட்டான் சுந்தரம்.

இதேவேளை, ஒரு நாள் இரவு காளிகோவில் வேப்பமரத் தடிக்குச் சென்றான் சுந்தரத்தின் நண்பனான சரண்.அவன் அங்கிருந்த பொற்காசுக் குடத்தைத் தோண்டி எடுத்தான்.

பொற்காசுகளை எடுத்துக் கொண்டு குடத்தில் கற்களையும் மண்ணையும் போட்டு நிரப்பி மீண்டும் மண்ணில் புதைத்து விட்டான். ஊரிலிருந்து திரும்பிய சுந்தரம் நேராக வேப்ப மரத்தடிக்குச் சென்றான். அங்கிருந்த தனது பொற்காசுகள் நிறைந்த குடத்தைக் தோண்டி எடுத்தவன் திடுக்கிட்டான். உள்ளே ஒரே கல்லும் மண்ணுமாக இருந்ததைக் கண்டான். இச்செயலைச் செய்தது தனது நண்பனான சரண்தான் என்பதைப் புரிந்துகொண்டான். அவன் நிலைகண்டு அவனது மனைவி ஓர் ஆலோசனை சொன்னாள். அதன்படி, அவனும் செய்தான். பின்னர் நேராகச் சரணிடம் சென்றான். சரண் ஒன்றுமே தெரியாதவன் போல், "வா சுந்தரம் எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தான்.

சுந்தரமும் நன்கு சிரித்துக் கொண்டு, "மரத்தடியில் பொற் காசுக் குடத்தைப் புதைத்த நேரம் நல்ல நேரம். எனது மாமனார் இறக்கும் நேரத்தில் என்னிடம் பத்தாயிரம் பொற் காசுகளைத் தந்தார். வீட்டில் வைக்கப் பயமாக இருக்கிறது. எனவே, அதனையும் வேப்பமரத்தடியில் புதைத்துவிட முடிவு செய்துள்ளேன்" என்று கூறினான்.

இதைக் கேட்ட சரணின் மனம் வேகமாக எண்ணமிட்டது. இப்போது போய் வேப்பமரத்தடியில் சுந்தரம் பார்த்தால் பொற்காசுகளை நான்தான் திருடினேன் என்று கண்டு பிடித்து விடுவானே அத்துடன், இப்போது கொண்டு வந்த பத்தாயிரம் பொற்காசுகளையும் வேப்பமரத்தடியில் புதைக்க மாட்டானே என்று நினைத்தான். எனவே நடு இரவில் மெல்லத் தான் முன்பு திருடிக் கொண்டு வந்த ஆயிரம் பொற்காசுகளை எடுத்துக் கொண்டு வேப்பமரத்தடிக்குச் சென்று குடத்தில் இருந்த கல்லையும் மண்ணையும் எடுத்து விட்டு பொற்காசுகளைப் போட்டுப் பழையபடி நிரப்பி விட்டு வீடு திரும்பினான்.

இதை ஊகித்த சுந்தரம் நடுஇரவில் வந்து தனது காசுகளை எடுத்துக்கொண்டு பழையபடி கல்லையும் மண்ணையும் போட்டுக் குடத்தை நிரப்பிவிட்டான். மறுநாள் இரவு அங்கு வஞ்சக எண்ணத்துடன் வந்த சரண் குழிகளைத் தோண்டிக் குடங்களை எடுத்தான். அவை அனைத்திலும் கல்லும் மண்ணும் இருக்கக்கண்டு திடுக்கிட்டான். பின்பு தான் செய்த வஞ்சகச் செயலுக்குக் கிடைத்த தண்டனை இது என உணர்ந்து மனம் திருந்தி வீடு திரும்பினான்.




அநாதைப் பெண் பசுவினுடைய ஒரு காதுக்குள் நுழைந்து மறு காதின் வழியாக வெளிவந்து தயாராக இருந்த துணியை எடுத்துக் கொண்டதை துயில் கொள்ளமல் இருந்த மூன்றாவது மகள் பார்த்துவிட்டாள்.

அழகும் சுருள் முடியும் வலிமையும் செல்வமும் கொண்டவன். சாறு நிறைந்த அப்பிள்களைக் கண்டபோது நின்று பரிகசிப்பது போல அப்பெண்களிடம் கூறினான்;

"அழகிய பெண்களே! உங்கள் மூவரில் இந்த அற்புதமான மரத்தின் அப்பிள் ஒன்றை யார் கொண்டுவருகிறீர்களோ அவளை நான் மணந்துகொள்வேன்" என்றான்.

சகோதரிகள் அப்பிள்மரத்தை நோக்கி விரைந்தார்கள்.ஒருத்தியை ஒருத்தி முந்திக்கொள்ள முயன்றார்கள்.ஆனால்,மிகவும் தாழ்வாக கைக்கு எட்டுவது போல் தொங்கிய அப்பிள்கள் இப்போது சகோதரிகளுடைய தலைக்கு மேலாக உயர்ந்து விட்டன.

சகோதரிகள் அப்பிள்களைப் பிடுங்க முயன்றார்கள். ஆனால், இலைகள் விழுந்து அவர்களைக் குருடாக்கி விட்டன. மீண்டும் அப்பிள்களைப் பிடுங்க முயன்றனர். ஆனால், அப்பிள்மரத்தின் கிளைகள் அவர்களுடைய பின்னல்களைச் சுற்றிக்கொண்டன. போராடிப் பார்த்தார்கள். ஆனால், அப்பிள்களை அவர்களால் எட்டமுடியவில்லை.

அப்போது அங்கு வந்த அநாதைப் பெண் அந்த அதிசய அப்பிள்மரத்தை நோக்கி நடந்தாள், உடனே கிளைகள் கீழே தாழ்ந்து, அப்பிள்கள் அவளது கைகளுக்குள்ளாக வந்தன.

## சிறுமிக்கு புள்ளிப்பசு கூறிய பதில்?

கடைசி மகள் வீடு திரும்பித் தான் கண்டவற்றை தனது தாயிடம் கூறினாள். இதனால், கிழவி பெருமகிழ்ச்சியுற்றாள். மறுநாளே தன் கணவனிடம் சென்று, " நீங்கள் போய் அந்த புள்ளிப் பசுவை வெட்டுங்கள்" என்று கூறினாள்.

அவள் கணவன் வியப்புற்று புத்தி கூற முயன்றான், "உன் நிதானத்தை இழந்துவிட்டாயா? பசு அருமையானது, இன்னமும் இளமையோடு இருக்கிறது" என்றான்.

"வெட்டுங்கள், பேச்சை நிறுத்திவிட்டு" என்று மனைவி வலியுறுத்தினாள். எதுவும் செய்ய இயலாது போகவே, அவன் தனது கத்தியைத் தீட்டத் தொடங்கி னான். இதுபற்றி அறிந்த அநாதைச் சிறுமி வெளியே ஓடி வந்து புள்ளிப் பசுவைக் கட்டிப்பிடித்தாள்.

"புள்ளிப் பசுவே, உன்னைக் கொல்லப் போகிறார்கள்" என்று கூறினாள்.

பசு பதிலளித்தது, "கவலைப்படாதே அழகியே!

**புள்ளிப்பசுவின் எலும்புகளைப் புதைத்த இடத்தில் ஓர் அப்பிள் மரம் வளர்ந்தது. அது அதிசயமானதாக இருந்தது. அதனது அப்பிள்கள் நன்கு பழுத்து, சாறு நிறைந்ததாக இருந்தன. பரந்த அதனது கிளைகள் வெள்ளியால் ஆனவை. அதனது சலசலத்த இலைகள் தங்கத்தால் ஆனவை**

நான் சொல்வது போலச் செய். எனது எலும்புகளை எடுத்து ஒரு கைக்குட்டையில் கட்டித் தோட்டத்தில் புதைத்து நாள்தோறும் நீர் ஊற்றி வா.என் இறைச்சியை உண்ணாதே. என்னை மறந்துவிடாதே" என்றது.

கிழவியின் கணவன் பசுவை வெட்டினான். அநாதைச் சிறுமி புள்ளிப்பசு தன்னிடம் சொன்னது போலச் செய்தாள். அவள் பசியோடு இருந்தாள். ஆனால் இறைச்சியை உண்ணவில்லை; புள்ளிப்பசுவின் எலும்புகளைத் தோட்டத்தில் புதைத்து நாள்தோறும் நீர் ஊற்றினாள்.

அதில் இருந்து ஓர் அப்பிள்மரம் வளர்ந்தது. அது அதிசயமானதாக இருந்தது அதனது அப்பிள்கள் நன்கு பழுத்து, சாறு நிறைந்ததாக இருந்தன. பரந்த அதனது கிளைகள் வெள்ளியால் ஆனவை. அதனது சலசலத்த இலைகள் தங்கத்தால் ஆனவை. அந்த வழியாக யார் சென்றாலும் அதனை நின்று பார்த்து அதிசயித்தார்கள்.

சிறிது காலம் சென்றது. ஒருநாள் கிழவியின் புதல்விகள் மூவரும் தோட்டத்தில் உலாவிக் கொண் டிருந்தார்கள். அந்நேரத்தில் இளைஞன் ஒருவன் அவ்வழியில் குதிரையில் செல்ல நேரிட்டது. அவன்

அழகிய அந்த இளைஞனிடம் ஓர் அப்பிளைக் கொடுத்தாள். அந்த இளைஞன் தான் கூறிய வாக்கின்படி சீக்கிரமாகவே அந்த அநாதைப் பெண்ணை மணம் புரிந்து கொண்டான். அன்றைய நாளிலிருந்து அவள் துயரத்தையே அறியவில்லை.நலத்துடனும் மகிழ்வுடனும் தன் கணவனுடன் வாழ்ந்து வந்தாள்.

(முற்றும்)

அடுத்த இதழில்...
நரபலி
திகில் தொடர்கதை ஆரம்பமாகிறது

விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..................................
..................................
முகவரி - ..................................
..................................
தொ.பேசி - ..................................
பத்திரிகையின் பெயர் - ..........................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்வலு குறைந்தாலும் மனோதிடம் குறையாத கிரிக்கெட் வீரர்கள்



உடல் அவயங்களில் குறைபாடுகள் இருந்தாலும் மனதளவில் வலுக்குறையாத பலர் இருக்கவே செய்கின்றனர். அதிலும் இப்படிப்பட்டவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவதும்கூட ஆச்சரியத்திற்குரிய விடயமே.

இதற்கு நல்லதொரு உதாரணம்தான் பாகிஸ்தானின் உடல் வலுக் குறைந்தோரின் கிரிக்கெட் அணியாகும்.

இந்த அணியில் உள்ள அனைத்து வீரர்களும் உடல் வலுக்குறைந்தோராவார். மேற்படி, கிரிக்கெட் அணியை நிர்வகிப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள வலுக்குறைந்தோருக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (Pakistan Disabled Cricket Association-PDCA) யின் செயலாளராக அமிருதின் அன்சாரி பணியாற்றுகின்றார்.

பாகிஸ்தானின் வலுக்குறைந்தோரின் கிரிக்கெட் அணியில் இடம்பெற்றுள்ள குறிப்பிடத்தக்க வீரர்தான் 24 வயதுடைய அபாஸி என்ற வீரராவார்.

இற்றைக்கு பதினைந்து வருடங்களுக்கு முன்னர் அபாஸியின் சகோதரரின் கையிலிருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் அது அபாஸியின் காலைத் தாக்கிப் படுகாயப்படுத்தியது. இதன் காரணமாக அபாஸியின் ஒரு காலை நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கிரிக்கெட் வீரராக வரவேண்டும் என்ற அவரது ஆசையும் கனவாகியது. அன்று முதல் மனமொடிந்து போயிருந்த அபாஸி, தொடர்ந்து 2005 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுறாவளியிலும் பாதிக்கப்பட்டார். இத்தகைய நிலையிலேயே பாகிஸ்தானில் உடல் வலுக் குறைந்தோருக்கான கிரிக்கெட் சங்கத்தைப் பற்றி அறிந்து கொண்ட அபாஸி அதில் தன்னையும் இணைத்துக்கொண்டு



## ஒருகாலை இழந்தபோதிலும் திறமையைக் காட்டும் பாகிஸ்தான் வீரர்

தனது திறமைகளை வெளிக்காட்டத் தொடங்கினார். உடலில் குறைவிருந்தாலும் மனதில் திடமுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் சிறப்பாக தனது திறமைகளை வெளிப்படுத்தினார் அபாஸி.

இதேவேளை, பாகிஸ்தானில் வலுக் குறைந்தோருக்கான உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் அண்மையில் நடைபெற்ற போது 12 அணிகள் போட்டியிட்டன. இதில் பாகிஸ்தான் காஷ்மீர் அணியின் சார்பாகவே அபாஸி போட்டியிட்டார். இதன்போது பார்வையாளர்கள் ஆச்சரியப்படும் வகையில் அபாஸி மிகத் திறமையாக விளையாடினார். துடுப்பாட்டம், விக்கெட் காப்பு என அவர் பல துறைகளிலும் மிளிர்ந்தார். முதலாவது போட்டியில் 81 பந்துகளில் 32 ஓட்டங்களையும் மிகுதி இரண்டு போட்டிகளில் 40 பந்துகளில் 58 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் உள்ள வலுக்குறைந்தோர் கிரிக்கெட் அணியுடன் போட்டிகளில் ஈடுபடவேண்டும் என்பதே அபாஸியின் நீண்டநாள் ஆசையாம். அந்த ஆசை நிறைவேறும் நாளுக்காக அவர் காத்துள்ளாராம். மேலும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினதும் சர்வதேச கிரிக்கெட் சபையினதும் அங்கீகாரத்தைப் பெறும் முயற்சியிலும் பாகிஸ்தான் வலுக்குறைந்தோருக்கான கிரிக்கெட் சபை முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாம்.



# அக்தரின் கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக்குறி...?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான அக்தர் பாகிஸ்தான் அணியில் மீண்டும் இடம்பெறக்கூடிய வாய்ப்பை முற்றாக இழந்து விடக்கூடும் என்று சில விமர்சகர்கள் கருதுகின்றனர்.

அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்த அக்தார் தனது திறமையை மீண்டும் நிரூபித்தால்தான் மீண்டும் அணியில் இடம்பிடிக்கக்கூடிய வாய்ப்புள்ள நிலையில், அவர் தனது திறமையை வெளிப்படுத்துவதற்கு உள்ளூர் போட்டிகளையே நம்பியிருந்தார். எனினும், உள்ளூர் போட்டிகளிலும் அவருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படாமையினால் அவரது கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இதேவேளை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பிறந்துள்ள 2010 ஆம் ஆண்டிற்கென தயார் செய்துள்ள கிரிக்கெட் வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் அக்தாரின் பெயர் இடம்பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் இந்திய அணி முதலாவது இடத்தை அடைந்தமையையொட்டி அந்த அணிக்கு 2009 ஆம் ஆண்டிற்கான 'டெஸ்ட் செம்பியன்ஷிப்' விருது ஐ.சி.சி.யினால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, விருதைப் பெற்றுக்கொண்ட இந்திய அணியின்

# டோனி மகிழ்ச்சி



தலைவர் டோனி கருத்துத் தெரிவிக்கையில், 14 மாதங்களாக இந்திய அணி கடுமையாகப் போராடியதன் வெளிப்பாடாகவே அதிக வெற்றிகளைப் பெற்று இவ்வாறு தரவரிசையில் முதலிடத்திற்கு வரமுடிந்ததாகவும் தொடர்ந்து இந்த இடத்தை தக்கவைக்க மேலும் முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



மும்முனை கெரம்;

# இந்தியா செம்பியன்

மாலைதீவுகளில் நடைபெற்ற மும்முனை 'கெரம்' போட்டிகளில் இந்திய அணி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்தியா, இலங்கை, மாலைதீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற இந்த மும்முனைப் போட்டியில் ஆண்கள் மற்றும் மகளிர் ஆகிய இரண்டு பிரிவுப் போட்டிகளிலும் இலங்கை அணி இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்கது. போட்டியை நடத்திய மாலைதீவு மூன்றாவது இடத்தையே பெற்றது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டி இந்திய, இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்றதில் 2-1 என்ற கணக்கில் இந்தியா வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்


சி.ராகுலன், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவராவார்.


யா/அராலி சரஸ்வதி ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் கு.விதுஷனா, 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், குமார்-ரஜனி தம்பதியரின் புதல்வியாவார்.


வேவெல்தெனிய, அல்-ஹசன் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சுமையா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஃபிர்தௌஸ்-ரெலீனா தம்பதியரின் புதல்வியாவார்.


மா/இஸ்மாலியா மு.வித்தியாலய மாணவியான எஃப்.சலாமா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் கலாம்-பவாமிதா தம்பதியரின் புதல்வியாவார்.


கமு/கார்மேல் பற்றிமா கல்லூரியில் கல்வி கற்கும் அஹ்மத் சிபி, 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அலிகான்-ஷியானா ஆகியோரின் புதல்வர் ஆவார்.


மாவனல்லை ம.கல்லூரி மாணவனான எம்.ஸியாத், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ஹரூஸ்-சித்தி ரிபாயா தம்பதியரின் புதல்வராவார்.


களு/மாளிகாஹேன மு.ம.வித்தியாலய மாணவியான எஃப். ஜெப்ரா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜுபைர்-குர்ரத்துல் மஸீதா தம்பதியரின் புதல்வியாவார்.


எஃப்.நஸ்ரா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நாபாவளை மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற இவர், எம்.நயீம்-என்.ரமீலா ஆகியோரின் புதல்வியாவார்.


நாபாவளை மு.ம.வித்தியாலய மாணவியான எஃப். நிஸ்லா, 131 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.நயீம்-என்.ரமீலா ஆகியோரின் புதல்வியாவார்.


க/தெஹிதெனிய மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் அஸ்கி அஹமட், 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஸ்வாஜ்-பர்வின் தம்பதியரின் புதல்வராவார்.


ஹபுகஸ்தலாவை அல்-மின்ஹாஜ் தே.பாடசாலை மாணவியான எஃப்.ஹிபா, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,எம்.ஹன்சான்-நஜீமுன்னிசா தம்பதியரின் புதல்வியாவார்.


ம.கிஷோபன், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தி/விவேகானந்தா கல்லூரியின் மாணவனான இவர், மகேந்திரராசா-இரஞ்சனிதேவி தம்பதியரின் புதல்வராவார்.


வ/கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பாடசாலை மாணவன் பு.செந்தமிழன், 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.


கிரி/மின்ஹாஜ் மு.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.பர்ஹான், 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் வதூர்-சிஹானா தம்பதியரின் புதல்வர் ஆவார்.


கிரி/மின்ஹாஜ் மு.வித்தியாலய மாணவி எஃப்.பஸ்லா, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கலீலூர் ரஹ்மான்-பரீனா தம்பதியரின் புதல்வி ஆவார்.


ஆயிஷா பா.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப்.இஸ்றா, 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அன்வர்-ஆயிஷா தம்பதியரின் புதல்வியாவார்.


திருகோணமலை அல்-மின்ஹாஜ் மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் அஷ்ரப் மியான், 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தாஹிர்-ரமீஸா தம்பதியரின் புதல்வராவார்.


கெகுனகொல்ல தே.பாடசாலையில் கல்வி கற்கும் எஃப்.[illegible], 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஏ.சலாம்-எஸ்.மஸாஹிரா ஆகியோரின் புதல்வியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரத்மலானை இந்துக் கல்லூரி மாணவன் எம்.அக்மல், 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ராசிக்-ருக்ஷானா தம்பதியரின் புதல்வராவார்.


*யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து சித்தியடைந்த மாணவர்களான (இடமிருந்து வலம்) த.ஐந்துஷா (143 புள்ளிகள்), த.சுபாஜினி (143 புள்ளிகள்), ர.விதூசிகா (146 புள்ளிகள்), கி.டனுலக்ஷன் (152 புள்ளிகள்), க.அபர்ணா (147 புள்ளிகள்), சி.தனுகா (140 புள்ளிகள்), ர.கிருத்திகா (160 புள்ளிகள்) ஆகியோரையே படத்தில் காண்கின்றீர்கள்.*



**அன்றாட முக்கிய வேலைத் திட்டங்களையும் வருடாந்த விசேட தினங்கள், நிகழ்வுகள், வியாபார நடவடிக்கைகள் உட்பட பல்வேறு தேவைகளின் நிமித்தம் நாட்குறிப்பை (Diary) பயன்படுத்துபவர்கள் நம்மில் பலர் உளர். தனிப்பட்ட தகவல்கள், அழைப்பிதழ்கள், விழாக் குறிப்புகள், நினைவில் கொள்ள வேண்டிய விடயங்கள், தொலைபேசி எண்கள், கல்வி-தகவல்கள்,குறிப்புகள் என்பனவற்றினை நாட்குறிப்பில் தத்தமது தேவைகளுக்கு ஏற்ப குறித்துக் கொள்ள முடியும். நாட்குறிப்புகளில் பல வகைகள் உள்ளன. பொக்கெட் டயறி, எக்சக்கட்டிவ் டயறி, சேவை டயறி, பிஸ்னஸ் டயறி என்று அவற்றை வகைப் படுத்தலாம்.**



# சில நாட்குறிப்புகள் பின்னர் நூலாகின...





## ஆரம்பம்

நாட்குறிப்பின் ஆரம்பம் இங்கிலாந்திலேயே இடம்பெற்றுள்ளது. அது சுமார் 407 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்துள்ளது. அதன்படி, 1602 ஆம் ஆண்டளவில்தான் நாட்குறிப்பின் ஆரம்பம் நிகழ்ந்துள்ளதாக சர்வதேச அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், இங்கிலாந்தில் வாழ்ந்த ஜோன் எவ்லின் என்பவரே முதன் முதலில் உலகில் நாட்குறிப்பு எழுதியவராகக் கணிக்கப்படுகின்றார். அன்று முதல் அவர் வாழ்ந்த ஐம்பதாண்டுகளுக்குத் தொடர்ந்து அவர் நாட்குறிப்பினை எழுதும் வழக்கத்தினைக் கொண்டுள்ளார். இவரது நாட்குறிப்புகள் அனைத்தும் 1818 ஆம் ஆண்டில் ஒரு நூலாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. ஜோன் எவ்லின் உலகுக்கு அறிமுகப்படுத்திய நாட்குறிப்புத்தான் இன்று பரிமாணம் அடைந்து, உலகம் முழுவதும் வழக்கத்தில் உள்ளது.


இதுதவிர, 1633 முதல் 1703 வரை 70 ஆண்டுகளாக இடம்பெற்ற சம்பவங்களை இடைவிடாது நாட்குறிப்பில் பதிவுசெய்த சேமுவெல் பெபிஸ் எனும் ஆங்கிலேயரின் நாட்குறிப்புகளும் நூலாக வெளியிடப்பட்டன .உலக வரலாறு மற்றும் அந்தந்தக் காலப்பகுதிக்குரிய சமூக, விஞ்ஞான நிகழ்வுகளை கற்பவர்களுக்கு இந்நூல் பெரும் துணை புரிவதாக அமைந்துவிட்டது.

அதன் பின்னர், ஃபிரான்சிஸ் பேர்னி எனும் நபரினால் 1842 முதல் 1846 வரையான நான்காண்டு காலப்பகுதியில் எழுதப்பட்ட நான்கு நாட்குறிப்புகள் முக்கிய பதிவாகக் கருதப்படுகின்றன. மிகக்குறுகிய காலத்தில் எழுதி-அச்சில் பதிவாகி-நூலாகிய பெருமைக்குரியவராக ஃபிரான்சிஸ் பேர்னி விளங்குகின்றார். இந்த மூவரினதும் நாட்குறிப்புகள் பல்வேறு மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டு, பாவனையாளர்களின் கைகளுக்கு சென்றுள்ளன.

எமது நாட்டிலும் இவ்வாறு முக்கிய விடயங்கள் அடங்கிய நாட்குறிப்புகள் சில நூல் வடிவத்தினைப் பெற்றுள்ளன. அத்தகைய தொரு நாட்குறிப்பினை எழுதிய முதலாவது நபர் சேர்.ஜோன் டொயிலி என்பவராவார். இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்த இவர், தேசாதிபதியாகவும் நீதிபதியாகவும் மொழிபெயர்ப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் சிங்களம், ஆங்கிலம், பாளி ஆகிய மொழிகளில் புலமைபெற்றவராவார். இவர் எழுதிய நாட்குறிப்பு 'டொயிலியின் நாட்குறிப்பு' என்ற பெயரில் 1917 இல் எச். டபிள்யூ.கொரிங்டன் என்பவரினால் அச்சுருவாக்கப்பட்டது. இது பிறநாட்டைச் சேர்ந்த ஒருவரினால் இலங்கையில் எழுதப்பட்டு நூல் வடிவம் பெற்ற முதலாவது நாட்குறிப்பாகும். தவிர, இலங்கையர் ஒருவரின் நாட்குறிப்பு முதன்முதலில் நூலுருவானது என்றால், அது அநகாரிக தர்மபாலவினுடையதாகும். இதுதவிர, மேலும் பல உள்நாட்டு-வெளிநாட்டு அறிஞர்களினதும் நாட்குறிப்புகள் நூல் வடிவம் பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.


சேமுவெல் பெபிஸின் நாட்குறிப்பின் சிறுபகுதி

'L' எழுத்துக்களை கோட்டினால் இணைத்தவாறு, குகைக்குச் செல்வதற்கு சிங்கத்திற்கு வழிகாட்டுங்கள் **1**




**2** கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக்கொண்டு குறுக்கெழுத்தைப் பூர்த்தி செய்க



RAIN
ROBIN
TULIPS
SPRING
PUDDLES
FLOWERS
UMBRELLA

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து, கருத்துள்ள வசனங்களை அமைக்க **5**


1. மயில்கள்/முட்டையிடும்/ஜப்பான்/சிவப்பாக/நாட்டு
..............................................................
2. உள்ளன/துதிக்கையில்/நான்கு லட்சம்/தசைகள்/யானையின்
..............................................................
3. நெற்பயிரை/மக்கள்/முதலில்/பயிர் செய்தவர்கள்/சிந்து சமவெளி/ஆவர்
..............................................................
4. முத்து/பதினைந்து/சிப்பியில்/எடுக்கும்/ஆண்டுகள்/விளைய
..............................................................
5. வருமான வரி/ குவைத்/ஆகும்/நாடு/இல்லாத
..............................................................

## அறிவுக்கு விருந்து 239 விடைகள்

**போட்டி: 01**

1. குதிரைப் படை
2. நுங்கு
3. விதவை
4. அம்புஜம்
5. மணி

**போட்டி: 02**




**போட்டி: 05**

கம்பு, கங்குல், முகில், முகம், கிழங்கு, புல், கல், முழங்கு, கழகம், கழல், குழம்பு, முழம், புகு, கமுகு, குழல், புகல், புழங்கு, கங்கு, மூங்கு என்பன போன்று பல சொற்கள் அமைக்கலாம்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து 239 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
வினோத் அன்ரனி,
தரம் - $13^{A}$(கலை),
புனித பத்திரிசியார் கல்.,
யாழ்ப்பாணம்.

---

**போட்டி: 02**
ரும்தா இம்தியாஸ், தரம் - $7^{D}$, அறபா தே.பாட.,
வெலிகம.

---

**போட்டி: 03**
எம்.ஸும்ரி, தரம் - 6, அல்-அஸ்ஹர் ம.கல்., திஹாரிய.

---

**போட்டி: 04**
ஏ.டனூசியா, தரம் - $2^{T}$, விகாரமஹாதேவி பெ.கல்.,
கண்டி.

---

**போட்டி: 05**
தே.காயத்திரி, தரம் - 10, விக்டோரியா கல்., சுழிபுரம்.

### பாராட்டுப் பெறுவோர்

- எம்.முர்ஷித். தரம்-$7^{B}$, ஹமீத் அல்-ஹுசைனியா கல்., கொழும்பு.
- தி.லோஜினி, தரம்-8, கெங்கல்ல த.வித்., கண்டி.
- வி.கமலநயனன், தரம்-7, சரஸ்வதி ம.கல்., பதுளை.
- அ.பாத்திமா நுஸ்ரா, தரம்-$10^{A}$, மெதடிஸ்ட் பெ.கல்., திருகோணமலை.
- உ.துவாரகா, இல-141, பெருசெல்ல வீதி, எட்டியந்தோட்டை.
- எஸ்.கோகுலன், தரம்-$8^{B}$, ரஜவெல்ல இ.தே.பாட., கண்டி.
- மு.முஷர்ரிபா, தரம்-9, மன்/அல்-மினா ம.வித்., தாராபுரம்.
- மொஹிடீன் ஏ.அஸீஸ், தரம்-11, ஸாஹிரா ம.வித்., கம்பஹா.
- ஜெ.ஷதுர்சியன், தரம்-$5^{M}$, கார்மேல் பற்றிமா தே.பாட., கல்முனை.
- ருவினா மரிக்கார், தரம்-5, அல்-அகீல் ம.வித்., கொட்டியாகும்புர.






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.01.13 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 242**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


நிழற்றப்பட்டுள்ள பகுதியைக் குறிக்கும் பின்னத்தில் வட்டமிடுங்கள் **4**




வித்தியாசமான உருவில் X அடையாளமிடுக **3**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சூரிய, சந்திரர்' ஏரி







தாய்வானின் மிகப்பெரியதும் உல்லாசப் பயணிகளைக் கவர்வதுமான இயற்கை ஏரி (Sun Moon Lake) 'சூரிய, சந்திரர்' ஏரி. இந்த ஏரியைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகள் யுச்சி நான்ட்டோ (Yuchih, Nantou) என்று அழைக்கப்படுகின்றன. இப்பகுதிகள் 'தாவோ' என்னும் பழங்குடியினருக்கு தாயகமாக விளங்குகின்றன. இந்த 'சூரிய சந்திரர்' ஏரி 'லாலு' (Lalu) என்னும் ஒரு குட்டித்தீவை சூழ்ந்து அமைந்துள்ளது.

தற்பொழுது குட்டித்தீவாகக் காட்சியளிக்கும் இந்த லாலு தீவு ஒரு காலத்தில் மிகப் பெரிய தீவாக இருந்துள்ளது. காலப்போக்கில் ஏரியின் ஒரு பகுதி சந்திர வடிவிலும் இன்னொரு பகுதி சூரிய வடிவிலும் உருவானதையடுத்து தீவும் குட்டித்தீவாகக் குறுகியதுடன் இந்த ஏரிக்கும் 'சூரிய சந்திரர்' ஏரி என்ற பெயர் ஏற்படலாயிற்று. இந்த ஏரியின் கிழக்குப் பகுதி சூரியன் போன்றும் மேற்குப் பகுதி சந்திரன் போன்றும் காட்சியளிக்கின்றன.

இந்த ஏரியின் மத்தியில் உள்ள லாலு தீவு, இப்பகுதியைச் சேர்ந்த 'தாவோ' பழங்குடியினரின் புனித பூமியாக வழிபடப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் இந்த லாலு தீவிலேயே 'தாவோ' பழங்குடி இன மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

வருடந்தோறும் இந்த 'சூரிய சந்திரர்' ஏரியில் 3 கிலோமீற்றர் தூர பந்தயமான நீச்சல் விழாவொன்றும் நடைபெற்று வருகிறது. கடந்த காலங்களில் இந்த நீச்சல் விழாவில் ஆயிரக்கணக்கான போட்டியாளர்கள் பங்கு பற்றினர். இவ்விழாவின்போது இசைநிகழ்ச்சிகள், வாணவேடிக்கைகள் போன்ற பல அம்சங்களும் இடம்பெறுகின்றன.

# பஞ்சுக்குச்சிகள் தோன்றிய விதம்





காதுகளைச் சுத்தம் செய்வதற்கு இன்று உலகெங்கும் 'பஞ்சுக் குச்சிகளை' (பட்ஸ்) பயன்படுத்துகிறார்கள். இவை முதன்முதலில் எப்படி உருவாயின என்று தெரியுமா?

1920 ஆம் ஆண்டளவில் போலந்து நாட்டைச் சேர்ந்த லியோ ஜெர்ன்ஸ்டென்ஜாங் குடும்பத்துடன் அமெரிக்காவுக்குக் குடி பெயர்ந்தார். ஒருநாள் அவர்களது குழந்தையின் காதை அவரது மனைவி ஒரு பல்குத்தும் குச்சியில் பஞ்சை வைத்துச் சுத்தம் செய்ய முயல்வதை லியோ கண்டார். மனைவி தன்னையும் அறியாமல் குழந்தையின் காதைப் பழுதாக்கி விடக்கூடும் என்று லியோ பயந்தார். எனவே, பயன்படுத்துவதற்கு எளிதாகவும், பாதுகாப்பானதாகவும் உள்ள காது சுத்தம் செய்யும் குச்சியை உருவாக்க நினைத்தார்.

இவ்வாறான காதுக் குச்சியை உருவாக்க லியோவுக்குப் பல ஆண்டுகள் பிடித்தன. இதற்கு மரக்குச்சிகளைப் பயன்படுத்தினால் அவை உடையக்கூடும் என்று லியோ கருதியதால் 'கார்போர்டில்' தயாரிக்கப்பட்ட குச்சிகளைப் பயன்படுத்தினார். பஞ்சு உதிர்ந்து காதுக்குள் விழுந்து விடாமல் இருக்க அதை குச்சியில் ஒட்ட வைப்பதற்கு வழிகாண வேண்டியிருந்தது.

1926 ஆம் ஆண்டில் தனது காதுக் குச்சிகளை விற்பனை செய்வதற்காக 'இன்பேன்ட் நாவல்டி' என்ற நிறுவனத்தை லியோ தொடங்கினார். ஆனால், தனது காதுக் குச்சிகளுக்கு என்ன பெயர் வைப்பது என்று லியோவுக்குத் தெரியவில்லை. இறுதியாக அர் 'பேபி கேஸ்' என்று பெயர் சூட்டினார். ஆனால், அவர் ஏன் அந்தப் பெயரை வைத்தார் என்று யாருக்குமே தெரியவில்லை. பின்னர் தான் வைத்த பெயர் அவ்வளவு தூரம் வாடிக்கையாளரை ஈர்ப்பதாக இல்லை என்று நினைத்த லியோ, 'கியூ-டிப்ஸ் பேபி கேஸ்' என்று பெயர் சூட்டினார். இறுதியாக 'கியூ-டிப்ஸ்' எனும் பெயர் மட்டும் எஞ்சியது.



இன்று 'கியூ-டிப்ஸ்கள்' காதுகளை மட்டுமல்ல, நுணுக்கமான உபகரணங்களையும் காயங்களையும் சுத்தம் செய்யவும் மருந்திடவும் கூட பயன்படுத்தப்படுகின்றன.



# கேரளாவின் நாட்டியக்கலை 'கதகளி'

கதகளி என்பதன் அர்த்தம் 'கதை-நாடகம்' என்பதாகும். இது இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்று வழக்கத்துக்கு மாறான கலவையாக அமைந்துள்ளது. ராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணக் கதைகளின் அடிப்படையில் 'கதகளி' நிகழ்த்தப்படுகிறது.

கதையை ஒரு வாய்ப்பாட்டுக் கலைஞர் பாடலாகப் பாடுவார் அல்லது எடுத்துக்கூறுவார். இதில் செண்டை, மத்தளம், செங்கிலா, ஈலத்தாளம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மாறும் முகபாவங்கள், கடுமையான உடல் இயக்கங்கள், முத்திரை எனப்படும் அர்த்தமுள்ள கையசைவுகள் போன்றவற்றின் மூலம் கதகளிக் கலைஞர்கள் கதையை வெளிப்படுத்துகின்றனர். கதகளி தனிச்சிறப்பான, விரிவான அலங்காரம் மற்றும் ஆடை அணிகளுக்குப் புகழ்பெற்றதாகும். 'சுட்டி' எனப்படும் ஒப்பனையை இடுவதற்கு ஒரு கதகளிக் கலைஞருக்கு இரண்டு மணி நேரமாகும். அரிசி, மா மற்றும் இயற்கையான மூலப்பொருட்களைக் கலந்து அந்த ஒப்பனை இடப்படும். ஒவ்வொரு வண்ணமும் ஒவ்வொரு வித ஆடைகளும் வெவ்வேறுபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதாபாத்திரங்களைக் குறிக்கின்றன. உதாரணத்துக்கு, 'மினுக்கு' மஞ்சள் நிறமானது பெண்கள் போன்ற மென்மையான கதாபாத்திரங்களுக்கு இடப்படுகின்றன. அந்தவகையில், பச்சா (உயர்ந்த கதாநாயகனுக்குரிய பச்சை நிறம்), ராவணன் போன்ற ஆக்ரோஷமான கதாபாத்திரங்களுக்கு), கதி (வில்லனுக்கு), கரி (தீயசக்திகளுக்கு உரிய கறுப்பு நிறம்) என்ற வகையில் அமைந்துள்ளன.

பாரம்பரியமாக 'கதகளி' நிகழ்ச்சிகள் கோவில்களிலும் செல்வந்தர்களின் வீடுகளிலும் நடைபெற்றன. அவை இரவில் தொடங்கி, அதிகாலை வரை நடைபெற்றன. தற்போது அவை அரங்கங்களில் நடைபெறுகின்றன. இன்றைய நவீன கால ரசிகர்களுக்கு ஏற்றவகையில், பழங்காலக் கதையின் சுவாரசியமான கட்டங்கள் மட்டும் நிகழ்த்தப்படுகின்றன. தற்போது, 'கதகளி' நிகழ்ச்சிகள் பொதுவாக இரண்டு முதல் மூன்று மணி நேரத்தில் நிறைவடைந்து விடுகின்றன.

# பறக்கும் தட்டுக்கள் பற்றிய ஆராய்ச்சிகள் நிறுத்தம்




பறக்கும் தட்டுக்கள் மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் பற்றிப் பேசப்படும் விடயம் தொடர்பான ஆர்ாய்ச்சிகள் மேற்கொள்வதை கைவிடுவதற்கு பிரிட்டன் தீர்மானித் திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இவை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற் கென சிறப்பு தனிப்பிரிவொன் றையே பிரிட்டன் நிறுவியிருந்தது. எனினும், இவ்வாறு கென பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருந்த தொலைபேசி மற்றும் ஈமெயில் தொடர்புகள் அனைத்தும் கடந்த டிசம்பர் 1 ஆம் திகதியிலிருந்து நிறுத் தப்பட்டுவிட்டன.

''கடந்த ஐம்பது வருடங்களாக இது தொடர்பாக நாம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டோம். ஆனால், பறக்கும் தட்டைப் பற்றியோ, வேற்றுக்கிரகவா சிகள் பற்றியோ எந்தவொரு விபரத்தையும் ஆதாரத்தையும் எம்மால் பெறமுடியவில்லை.

இதுகாலவரையிலும் இவை தொடர்பான ஆவணங்களை காப்பகப்படுத்தி வந்த ஊழியர் களுக்கு மாற்றுத்தொழில்கள் வழங் கப்படும் என்றும் அமைச்சு அறிவித் துள்ளது. பறக்கும் தட்டு, வேற்றுக் கிரகவாசிகள் என்று ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப் பட்டு வந்த வளங்கள் இனிமேல் பிரிட்டனின் பாதுகாப்பை மேம்படுத் துவதற்கு பயன்படுத்தப்படப் போகின்றனவாம்.

பறக்கும் தட்டுக்களை உறுதிப்படுத்தப்படாத ஒரு விடயத்திற்காக காலத்தையும் பணத்தையும் விரயப்படுத்துவது வீணானது என்ற தீர்மானத்திற்கு பிரிட்டன் வந்துள்ளது.

## பிரிட்டன் தீர்மானம்

வேறு உலகத்திலிருந்து பூமிக்கு வருகின்ற பிரச்சினைகளைவிட பூமியிலேயே ஏற்படும் அச்சுறுத்தல் களையிட்டு கவனம் செலுத்துவது மேலானது என்று தற்போது பிரிட் டன் கருதுகின்றது. இதற்கமைய, இனங்காணப்படாத வேற்றுக்கிரக வாசிகள், பறக்கும் தட்டுக்கள் போன்றவை குறித்த தகவல்களுக் அதுமட்டுமன்றி, இனங்காணப்படாத பறக்கும் தட்டைப் பற்றி ஆராய்ச்சி செய்வதால் நமது நாட்டிற்கு எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லை என்பதை தற்பொழுது உணர் கிறோம்'' என்று பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இருப்பினும், இனங்காண்பதற்காக பொருத்தப் பட்டிருந்த கருவிகள், இனிமேல் பிரிட்டனின் வான் பரப்பில் திடீரென நிகழக்கூடிய வான் தாக்குதல்களை இனங்காண்பதற் குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட் டுள்ளதாம். இல்லாத ஒன்றிற்காக வீண்விரயத்தை செய்வதைவிட நாட்டின் நன்மைக்கு அவற்றைப் பயன்படுத்துவதே சிறந்ததாக இருக்கும் என்று கருதுகின்றது பிரிட்டன். இந்த புதிய விளக்கமானது ஏனைய நாடுகளையும் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும் என்றே கருதப்படுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, ... 2010, ஜனவரி மாதம் 06 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8 Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 06, 2010.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org